# வரலாறு

## 1. மொகலாயர்கள் வருகை

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. முகலாய மன்னர் பாபர் படையெடுப்பின்போது இந்தியா பல்வேறு சிற்றரசுகளாக துண்டாக்கப்பட்டு சண்டை சச்சரவுடன் காணப்பட்டது.
2. டெல்லி பேரரசின் கடைசி சுல்தான் **இப்ராஹிம் லோடியால்** பிரபுக்களை கட்டுப்படுத்த இயலவில்லை.
3. இராஜபுத்திரர்களின் தலைவரான **இராணாசங்கா** அதிக வலிமைப் பெற்று விளங்கியதோடு டெல்லியைக் கைப்பற்றும் ஆர்வத்துடன் காணப்பட்டார்.
4. பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி **ஆலம்கான் லோடி**யிடமிருந்து ஒரு கடிதமும், பஞ்சாபின் ஆளுநர் **தௌலத்கான் லோடி**யிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது.
5. தென்னிந்தியாவில் **விசயநகர, பாமினி பேரரசுகள்** தங்களிடையே சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தன.
6. **ஜாகிருதீன் முகம்மது பாபர்** இந்தியாவில் முகலாய பேரரசுக்கு அடித்தளமிட்டார். இவர் கி.பி 1483 ஆம் ஆண்டு மத்திய ஆசியாவிலுள்ள உமர்ஷேக் மிர்ஷா என்பவருக்கு மூத்த மகனாகப் பிறந்தார்.
7. பாபர் துருக்கியைச் சார்ந்த **தைமூர்** இனத்தையும்,தாய் வழியில் மங்கோலிய இனத்தைச் சார்ந்த செங்கிஸ்கான் இனத்தையும் வழித்தோன்றலாக கொண்டிருந்தார்.
8. பாபர் தந்தையின் மறைவிற்கு பின் தனது 11-ஆம் வயதில் பர்கானாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.
9. கி.பி.1526 ஆம் ஆண்டு ஏப்ரல்21-ஆம் நாள் வரலாற்று புகழ்மிக்க **பானிப்பட்** போர்க்களத்தில் டெல்லியை ஆட்சிசெய்த இப்ராஹிம் லோடியை தோற்கடித்தார்.
10. முதல் பானிப்பட் போரில் பாபரின் பீரங்கிப்படை முக்கியப்பங்கு வகித்தது.
11. கி.பி.1527-ஆம் ஆண்டு **கான்வா** போர்க்களத்தில் பாபர் இராணாசங்காவை வெற்றிக்கொண்டார்.
12. கி.பி.1528-ஆம் ஆண்டு சந்தேரி போரில் **மாளவ மன்னர் மேதினிராய்** என்ற மன்னரை வெற்றிக்கொண்டார்.
13. கி.பி 1529-ஆம் ஆண்டு காக்ரா போரில் முகம்மது லோடியை தோற்கடித்து முகலாயப்பேரரசினை இந்தியாவில் நிலைநாட்டினார்.
14. பாபரின் பேரரசு கிழக்கே பீகார் முதல் மேற்கே பஞ்சாப், காபூல், காந்தகார் மற்றும் பதக்ஷான் வரை பரவியிருந்தது.
15. கி.பி 1530ஆம் ஆண்டு பாபர் உமாயூனை தனது வாரிசாக நியமனம் செய்த பின்பு காலமானார்.
16. **"துசுக்-கி-பாபரி"** அல்லது பாபரின் நினைவுகள் என்பது பாபர் துருக்கியமொழியில் எழுதிய சுயசரிதையாகும்.
17. பாபர் இந்தியாவை 200 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்து முகலாய பேரரசிற்கு அடித்தளமிட்டவர் ஆவார்.
18. பாபரின் மரணத்திற்கு பின் அவரின் மூத்த மகனாகிய உமாயூன் கி.பி 1530-ஆம் ஆண்டு முகலாய மன்னராக பொறுப்பேற்றார்.
19. உமாயூன் தனது 20-ஆம் வயதில் பதக்ஷானில் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
20. **காம்ரான், அஸ்காரி, ஹிண்டால்** ஆகியோர் உமாயூனின் சகோதரர்கள் ஆவர்.
21. இராஜபுத்திரர்களும்,குஜராத்தை சார்ந்த பகதூர்ஷாவும் உமாயூனுக்கு அச்சுறுத்தலாக இருந்தனர்.
22. கி.பி 1539-ஆம் ஆண்டு **சௌசா** என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஷெர்கானிடம் உமாயூன் தோல்வியுற்றார். அரியணையை இழந்து உமாயூன் 15 ஆண்டுகள் நாடோடியாக வாழ்ந்தார்.
23. கி.பி 1542-ஆம் ஆண்டில் **அமரக்கோட்டை** என்ற இடத்தில் அக்பர் பிறந்தார்.
24. கி.பி 1555-ம் ஆண்டு டெல்லி மற்றும் ஆக்ராவை கைப்பற்றி 15 ஆண்டுகளுக்கு பிறகு உமாயூன் மீண்டும் அரசரானார். உமாயூன் என்றால் அதிர்ஷ்டசாலி என்று பொருள்.
25. **வரலாற்று அறிஞர் லேன்பூலின்** கருத்துப்படி, உமாயூன் வாழ்க்கை முழுவதும் தடுமாறினார். இறுதியில் கி.பி 1556 ஆம் ஆண்டு உயிரிழந்தார்.
26. உமாயூன் தனது மகன் அக்பருக்கு பாதுகாப்பாளராக **பைராம்கானை** நியமித்தார்.
27. ஷெர்ஷாவின் உண்மையான பெயர் **ஃபரித்** என்பதாகும். இவர் உஷேன் என்பவரின் மகன் ஆவார்.
28. ஜோத்பூரை ஆட்சிசெய்த ஆப்கானிய கவர்னர் இவருக்கு **ஷெர்கான்** என்ற பட்டத்தை வழங்கினார்.

29. ஷெர்கான் பீகாரின் அரசரான பின் தன்னை ஷெர்ஷா என்று அழைத்துக்கொண்டார். இவரால் நிறுவப்பட்ட பேரரசு **சூர் வம்சம்** என அழைக்கப்பட்டது.
30. கி.பி. 1540-ஆம் ஆண்டு கன்னோசிப்போரில் மீண்டும் உமாயூனை வென்று டெல்லி மற்றும் ஆக்ராவை கைப்பற்றி தன்னை அரசராக அழைத்துக்கொண்டார்.
31. **கலிஞ்சார் கோட்டை** முற்றுகையின் போது எதிர்பாராத விதமாக நிகழ்ந்த வெடி விபத்தில் கி.பி. 1545 ஆம் ஆண்டு ஷெர்ஷா மரணமடைந்தார்.
32. ஷெர்ஷா முஸ்லீம் மதத்தலைவர்களின் ஆலோசனைகளை கேட்க மறுத்தார்.
33. ஷெர்ஷாவின் அமைச்சரவையில் **முக்கிய நான்கு அமைச்சர்கள்** இடம்பெற்றிருந்தனர்.

    திவானி-இ-விசாரத் - வரவு செலவு பொறுப்பாளர்
    திவானி-இ-ஆரிஷ் - இராணுவ பொறுப்பாளர்
    திவானி-இ-ரசாலத் - வெளியுறவு மற்றும் தூதரகப் பொறுப்பாளர்
    திவானி-இ-இன்ஷா - அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்
34. ஷெர்ஷா நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு பேரரசை பல சர்க்கார்களாக பிரித்தார். சர்க்கார்கள் பல பர்கானாக்களாகவும் பிரிக்கப்பட்டன.
35. ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களை கொண்டிருந்தன. கிராமமே மாநில நிர்வாகத்தின் கடைசி அங்கமாக விளங்கியது.
36. ஷெர்ஷா **இரயத்துவாரி** முறையை அறிமுகப்படுத்தினார். மேலும் விவசாயிகளுக்கு நிலஉரிமை குறித்து பட்டா வழங்கப்பட்டது.
37. ஷெர்ஷாவின் நில சீர்திருத்தத்தை மாமன்னர் அக்பர் பின்பற்றினார். எனவே **ஷெர்ஷா அக்பரின் முன்னோடி** என அழைக்கப்படுகிறார்.
38. ஷெர்ஷா அலாவுதீன் கில்ஜி பின்பற்றிய இராணுவ முறையின் முக்கிய அம்சங்களை பின்பற்றினார்.
39. ஷெர்ஷாவின் இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை மற்றும் யானைப்படையைக் கொண்டிருந்தது.
40. ஆப்கானிய போர்வீரர்களை ஷெர்ஷா உயர்பதவியில் அமர்த்தினார். குதிரைப்படையில் குதிரைகளுக்கு **சூடு போடும் முறை**யை அறிமுகப்படுத்தினார்.
41. ஷெர்ஷா காலாட்படையில் வீரர்கள் பற்றிய பதிவேட்டினை பராமரித்தார். அதனால் இராணுவத்தில் ஏற்படும் தவறுகள் அகற்றப்பட்டன.
42. ஷெர்ஷா சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.
43. ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் ஒற்றர்முறை மாற்றியமைக்கப்பட்டு பேரரசின் அனைத்து பகுதிகளிலும் **இரகசிய ஒற்றர்கள்** நியமனம் செய்யப்பட்டு அனைத்து செய்திகளும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.
44. ஷெர்ஷா சாலைகளின் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்களை நட்டு போக்குவரத்தை மேம்படுத்தினார்.
45. ஷெர்ஷா புழக்கத்திலிருந்த கலப்பு நாணயங்களை இரத்து செய்து வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களுக்கு ஒப்பீட்டு விகிதாசாரத்தை நிர்ணயம் செய்தார்.
46. நாணயங்களில் ஷெர்ஷா தனது பெயரினை **தேவநாகிரி** எழுத்தில் பொறிக்கச் செய்தார்.
47. ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் பொருளாதார நிலை மேம்பாடு அடைந்ததால் இவர் **"நவீன நாணய முறையின் தந்தை"** என அழைக்கப்படுகிறார்.
48. பீகாரிலுள்ள **சசாரம்** பகுதியில் ஷெர்ஷா தனது கல்லறையை இந்திய - கட்டட கலைப் பாணியில் உருவாக்கினார்.
49. ஷெர்ஷா டெல்லியில் புகழ்பெற்ற **புராணகிலா** என்ற சிறந்த கட்டடத்தை உருவாக்கினார்.
50. ஜலாலுதீன் முகம்மது அக்பர் கி.பி.1542-ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாள் அமரக்கோட்டையில் பிறந்தார். தனது 13-வது வயதில் பைராம்கான் துணையுடன் பேரரசராக முடிசூட்டப்பட்டார்.
51. கி.பி 1556-ல் புகழ்மிக்க பானிப்பட் போர்க்களத்தில் **ஹெமு** அக்பரால் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். இதனால் முகலாயரின் ஆட்சி டெல்லி மற்றும் ஆக்ராவில் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.
52. அக்பரின் வளர்ப்புத்தாய் மாகம் அனாகா இரண்டு ஆண்டுகள் நிர்வாகத்தை கட்டுபடுத்தினார். இக்காலம் **"அந்தப்புர அரசாங்க காலம்"** எனப்பட்டது.
53. அக்பரின் பேரரசு மேற்கே ஆப்கானிஸ்தான் முதல் கிழக்கே வங்காளம் வரையிலும் வடக்கே இமயம் முதல் தெற்கே கோல்கொண்டா வரையிலும் பரவி இருந்தது.
54. அக்பர் இராஜபுத்திரர்களுக்கு அரசின் உயர்பதவியில் நியமனம் செய்தார். இராஜமான்சிங், இராஜபகவான் தாஸ், இராஜாதோடர்மால், பீர்பால் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

55. அக்பர் முஸ்லிம் அல்லாதவர்களிடம் நல்லாதரவைப் பெற ஒற்றுமையை வளர்க்க **ஜிசியா** மற்றும் புனிதப் பயண வரியை ரத்து செய்தார்.
56. **இராஜாதோடர்மால்** பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிப்பெயர்த்தார்.
57. அபுல்பாசல் **அயினி அக்பரி** மற்றும் **அக்பர் நாமா** என்ற வரலாற்று புகழ்மிக்க நூல்களை எழுதினார்.
58. அபுல்பைசி இதிகாச நூல்களாகிய இராமாயணம் மற்றும் மகாபாரதத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார். சிறந்த இசைஞானியான தான்சேன் அக்பரின் அவையை அலங்கரித்தார்.
59. அக்பர் கி.பி 1575 ஆம் ஆண்டு **இபாதத் கானா** என்ற தொழுகை இல்லத்தைக் கட்டி பல்வேறு மதத்தலைவர்களை அழைத்து சமயத்தின் நற்கூறுகளை ஆய்வு செய்தார்.
60. கி.பி 1582 ஆம் ஆண்டு பூரண சகிப்புத்தனமையை அடிப்படையாகக் கொண்ட தேசிய சமயத்தை உருவாக்கும் **தீன் இலாஹி** எனப்படும் தெய்வீக மதத்தினை வெளியிட்டார்.
61. நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு விளைச்சலில் 1/3 பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது.
62. **மன்சப்** என்றால் ‘தரம்’ அல்லது ‘தகுதி’ என்று பொருள்படும். மன்சப்தாரி முறை முகலாயரின் இராணுவம் மற்றும் பொது நிர்வாக முறைக்கு அடிப்படையாக அமைந்தது.
63. அக்பர் **பதேப்பூர் சிக்ரி**யை குஜராத் வெற்றியின் நினைவாகக் கட்டினார். மேலும் புலந்தர்வாசா, அக்பரி மஹால், ஜஹாங்கிரி மஹால், பஞ்ச மஹால், ஜோத்பாய் அரண்மனை போன்றவற்றைக் கட்டினார்.
64. இந்திய வரலாற்றில் பன்முக சிறப்புற்ற பேரரசர் அக்பர் கி.பி 1605 ஆம் ஆண்டு தனது 63-வது வயதில் மறைந்தார்.
65. அக்பரின் மறைவைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் ஜஹாங்கீர் அல்லது **உலகினை வெல்பவர்** என்ற சிறப்புப் பெயருடன் கி.பி 1605-ஆம் ஆண்டு அரியணை ஏறினார்.
66. ஜஹாங்கீரின் மூத்த மகன் இளவரசர் குஸ்ரு தந்தைக்கு எதிராக கிளர்ச்சி செய்தார். ஐந்தாவது **சீக்கிய குரு அர்ஜீன்தேவ்** இளவரசருக்கு ஆதரவு அளித்ததால் இருவரும் கொல்லப்பட்டார்.
67. ஜஹாங்கீரின் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டிலிருந்து வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ ஆகியோர்கள் முகலாய அரசவைக்கு வருகை புரிந்தனர்.
68. கி.பி 1615-ஆம் ஆண்டு சூரத் நகரில் வணிகம் செய்ய சர் தாமஸ் ரோ ஜஹாங்கீரிடம் அனுமதிப் பெற்றார்.
69. ஜஹாங்கீர் தனது சுய சரிதையை **துசுக்-இ-ஜஹாங்கிரி** என்ற பெயரில் எழுதியுள்ளார்.
70. ஜஹாங்கீர் பதவி ஏற்கும் போது **‘நீதிச்சங்கிலி மணி’** என்ற ஒரு புதிய நீதி வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தினார்.
71. நீதிமணி **ஷாபர்ஜ்** அரண்மனையில் ஒரு முனையில் கட்டப்பட்டு மறுமுனை யமுனை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த கல்தூணில் இணைக்கப்பட்டிருந்தது.
72. மெகருன்னிஷா கி.பி 1611 ஆம் ஆண்டு பேரரசர் ஜஹாங்கீரை மணந்தார். இதனால் **நூர்மஹால்** என்ற சிறப்புப் பெயரினையும், நூர்ஜஹான் அல்லது **உலகின் ஒளி** என்ற சிறப்புப் பெயர்களையும் பெற்றார்.
73. ஜஹாங்கீர் பேரரசராக இருந்தபோதிலும் உண்மையான அதிகாரம் நூர்ஜகானிடமே இருந்தது. கி.பி 1611 முதல் கி.பி 1626 வரையிலான காலத்தை **நூர்ஜஹானின் காலம்** என்றே அழைக்கலாம்.
74. ஜஹாங்கீர் ஸ்ரீநகரில் **ஷாலிமர்** மற்றும் **நிஷாத்** பூந்தோட்டங்களை உருவாக்கினார்.
75. ஜஹாங்கீரின் மகனான **குர்ரம்** வரலாற்றில் ஷாஜஹான் என்று அழைக்கப்படுகிறார்.
76. ஷாஜஹான் கி.பி 1592 ஆம் ஆண்டு லாகூரில் பிறந்தவர். குர்ரம் **உலகின் அரசன்** (ஷாஜஹான்) என அழைக்கப்படுகிறார்.
77. பேரரசர் ஷாஜஹானின் ஆட்சிக்காலம் **மொகலாயர்களின் பொற்காலம்** எனப்படுகிறது. இவர் **கட்டட கலையின் இளவரசர்** என்றும் **பொறியாளர் பேரரசர்** என்றும் அழைக்கப்படுகிறார்.
78. ஷாஜஹான் தான் கட்டிய மாளிகைக்கு சிவப்பு கற்களுக்கு பதிலாக வெள்ளை பளிங்கு கற்களை பயன்படுத்தி **ஷாஜஹானாபாத்** என்ற புதிய தலைநகரை உருவாக்கினார்.
79. ஷாஜஹான் டில்லியில் கண்ணைக்கவரக்கூடிய செங்கோட்டையை உருவாக்கினார்.
80. உலகிலேயே மிகப்பெரிய பள்ளி வாசல்களில் ஒன்றான **ஜீம்மா மசூதி** மற்றும் முத்து மசூதியை வெள்ளை பளிங்கு கற்களால் கட்டினார்.
81. ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் யமுனை ஆற்றங்கரையில் ஆக்ரா நகரில் தனது அன்பு மனைவி மும்தாஜின் நினைவாக கட்டப்பட்டதாகும்.
82. 22 ஆண்டுகளின் கடின உழைப்பில் 20 இலட்சம் செலவில் **உஸ்தாத் இஷா** என்ற தலைமைச் சிற்பியின் மேற்பார்வையில் தாஜ்மஹால் கட்டப்பட்டது.

83. விலை மதிப்பற்ற அரிய வகையான கற்களை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சேகரித்து உலக மக்களே வியக்கும் மயிலாசனத்தை உருவாக்கி அதில் கோஹினூர் வைரத்தை பதிக்கச் செய்தார்.
84. ஷாஜஹானின் மயிலாசனத்தை பாரசீக படையெடுப்பாளர் **நாதிர்ஷா** கி.பி.1739-ஆம் ஆண்டு எடுத்துச் சென்றார்.
85. கிபி.1657-ல் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டதால் அவரின் நான்கு மகன்களுக்குள் **வாரிசுரிமைப்போர்** நடைப்பெற்றது.
86. ஷாஜஹானின் மூன்றாவது மகனாகிய ஔரங்கசீப் கி.பி.1658-ஆம் ஆண்டு தன் தந்தையைக் கைது செய்து வீட்டுக்காவலில் வைத்தார்.
87. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த **பெர்னியர்**, **டிராவர்னியர்** மற்றும் **மனுசி** போன்றோர் மிகச்சிறந்த வரலாற்றுக்குறிப்புகளை பதிவு செய்தனர்.
88. பேரரசர் ஷாஜஹானின் மூன்றாவது மகனாகிய ஔரங்சீப் முகலாய வம்சத்தின் வலிமை வாய்ந்த மன்னராக கருதப்படுகிறார். அவர் **ஆலம்கீர்** என்ற சிறப்புப் பட்டத்தினை சூட்டிக்கொண்டார்.
89. ஔரங்கசீப் சமயப் பற்றுமிக்க **சன்னி முஸ்லிம்** பிரிவைச் சேர்ந்தவர். இவர் இஸ்லாமின் புனித நூலான **குரானை** தினமும் படித்து வந்தார்.
90. முஸ்லீம் அல்லாதவர்கள் மீது **ஜெசியா** மற்றும் புனிதப் பயண வரியினை மீண்டும் விதித்தார்.
91. ஔரங்கசீப் ஒன்பதாவது சீக்கிய குருவான **தேஜ்பகதூரை** கொன்றார். இதனால் பத்தாவது சீக்கிய குருவான **கோவிந்த் சிங்** முகலாயர்களை பழிவாங்க சீக்கியர்களை எதிர்ப்பு சமூகமாக மாற்றினார்.
92. குரு கோவிந்த் சிங் **'கல்சா'** என்ற இராணுவ அமைப்பை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தார்.
93. மராத்திய தலைவர் சிவாஜியை அடக்க தக்காணத்தின் ஆளுநரான **செயிஷ்டகானை** ஔரங்சீப் அனுப்பினார்.
94. ஔரங்கசீப் 25 ஆண்டுகள் தக்காண படையெடுப்பில் காலத்தை வீணாக்கியதால், பேரரசு சிதைந்து கருவூலம் காலியானது.
95. **தக்காண புற்றுநோய்** ஔரங்கசீப்பை அழித்ததது. கி.பி 1707-ல் ஔரங்கசீப் இயற்கை எய்தினார்.
96. அக்பரின் காலத்தில் பேரரசு 15 சுபாக்களாக பிரிக்கப்பட்டிருந்தது. சுபாவினை நிர்வாகம் செய்தவர் **சுபேதார்** எனப்பட்டார். கிராமினி கிராமத்தின் நிர்வாக அதிகாரியாக இருந்தார்.
97. அக்பர் **ஜப்தி** முறையை அறிமுகப்படுத்தினார். நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.
98. பாபரால் உருவாக்கப்பட்டு, அக்பரால் நிலைநிறுத்தப்பட்ட மொகலாயப்பேரரசு ஔரங்கசீப் ஆட்சியின் போது நிலைக்குலைந்து முடிவுற்றது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. முதல் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு ……… ஆகும்.**
அ) கி.பி.1536 **ஆ) கி.பி.1526** இ) கி.பி.1506

**2. ஷெர்ஷா ………ன் முன்னோடி என அழைக்கப்படுகிறார்.**
**அ) அக்பர்** ஆ) உமாயூன் இ) ஷாஜஹான்

**3. ………… அரசரின் அரண்மனையில் நீதிச்சங்கிலி கட்டப்பட்டிருந்தது.**
அ) ஔரங்கசீப் **ஆ) ஜஹாங்கீர்** இ) பாபர்

**4. குரு அர்ஜீன் தேவ்………. சீக்கிய குரு ஆவார்.**
**அ) ஐந்தாவது** ஆ) ஒன்பதாவது இ) பத்தாவது

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உமாயூன் என்றால் **அதிர்ஷ்டசாலி**
2. இரண்டாம் பானிப்பட் போரில் அக்பரால் தோற்கடிக்கப்பட்டவர் **ஹெமு**
3. **ஷாஜஹான்** ஆட்சிகாலம் முகலாயர் ஆட்சியின் பொற்காலம் என்றழைக்கப்படுகிறது.
4. தான்சேன் **அக்பர்** அவையில் இருந்தார்.

**III. பொருத்துக.**

1. இராணாசங்கா - அ. 1582
2. தீன்-இலாஹி - ஆ. வருவாய்முறை
3. இரண்டாம் பானிபட் போர் - இ. மேவார் நாட்டு அரசர்
4. இராஜாதோடர்மால் - ஈ. 1556

**விடைகள்**
**1. இ**
**2. அ**
**3. ஈ**
**4. ஆ**

**IV. ஒரு வார்த்தையில் விடையளி.**

**1. கன்வா போர் எப்பொழுது நடைப்பெற்றது?**
கி.பி. 1527

**2. ஜஹாங்கீரின் சுயசரிதை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**
துசுக்-இ-ஜஹாங்கிரி

**3. அக்பரின் பாதுகாவலர் யார்?**
பைராம்கான்

**4. "உலகின் ஒளி" என அழைக்கப்படுபவர் யார்?**
நூர்ஜஹான்

## V. குறுகிய விடையளி.

**1. பாபர் இந்தியாவில் எவ்வாறு முகலாயப்பேரரசை நிறுவினார்?**
1. பஞ்சாப் ஆளுநர் தௌலத்கான் லோடி பாபரை இந்தியாவின் மீது படையெடுக்க அழைத்தார்.
2. கி.பி 1526-ல் நடைபெற்ற முதல் பானிப்பட் போரில் பாபர் இப்ராஹிம் லோடியை தோற்கடித்தார்.
3. பாபர் டெல்லிசுல்தானியரை தோற்கடித்து முகலாயப்பேரரசிற்கான அடித்தளத்தை இந்தியாவில் நிறுவினார்.

**2. ஜஹாங்கீர் ஆட்சியில் நூர்ஜஹானின் பங்கினை வரைக.**
1. கி.பி 1611-ஆம் ஆண்டு ஜஹாங்கீர் நூர்ஜஹானை மணந்தார்.
2. நூர்ஜஹான் 'நூர்மஹால்' மற்றும் 'உலகின் ஒளி' எனவும் அழைக்கப்பட்டார்.
3. ஜஹாங்கீர் அரசராக இருந்தபோதும் உண்மையான அதிகாரம் நூர்ஜஹானிடமே இருந்தது.

**3. ஷெர்ஷாவின் நாணய சீர்திருத்தம் பற்றி குறிப்பு எழுதுக.**
1. ஷெர்ஷா பழைய கலப்பு நாணயங்களை ரத்து செய்தார். தங்கம், வெள்ளி நாணயங்களை வெளியிட்டார்.
2. வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களுக்கு ஒப்பீட்டு விகிதாசாரத்தை நிர்ணயம் செய்தார்.
3. எனவே இவர் நவீன நாணய முறையின் தந்தை எனப்படுகிறார்.

**4. முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களில் ஏதேனும் நான்கு கூறுக.**
1. முகலாய பேரரசில் முறையான வாரிசுரிமைக் கொள்கை இல்லாததால் வாரிசுரிமைப்போர்கள் ஏற்பட்டன.
2. ஔரங்கசீப்பின் சமயக்கொள்கை முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைய முக்கிய காரணமாக அமைந்தது.
3. மராத்தியர் எழுச்சி, நாதிர்ஷா, அகமது அப்தாலியின் படையெடுப்பு முகலாயப்பேரரசை அழிவுறச்செய்தது.

## VI. விரிவான விடையளி.

**1. யாருடைய காலம் "முகலாயர்களின் பொற்காலம்" என அழைக்கப்படுகிறது? ஏன்?**

**1. முகலாயர்களின் பொற்காலம்:**
1. பேரரசர் ஷாஜகானின் ஆட்சிக்காலம் முகலாயர்களின் பொற்காலம் என்றழைக்கப்படுகிறது.
2. முகலாய பேரரசு ஷாஜஹானின் ஆட்சிக்காலத்தில் புகழின் உச்சியை அடைந்தது.
3. கட்டட கலையின் விந்தைகள் முகலாய பேரரசின் பொருளாதார செழிப்பினை பறைசாற்றுகிறது.

**2. கட்டட கலையின் இளவரசர்:**
1. ஷாஜஹான் கட்டட கலையின் இளவரசர் மற்றும் பொறியாளர் பேரரசர் என்றும் சிறப்பிக்கப்படுகிறார்.
2. ஷாஜஹான் சிவப்பு கற்களுக்கு பதிலாக வெள்ளை பளிங்கு கற்களை பயன்படுத்தினார்.

**3. ஜீம்மா மசூதி:**
1. ஷாஜஹான் வெள்ளை பளிங்கு கற்களால் கட்டப்பட்ட ஜீம்மாமசூதியை கட்டினார்.
2. இது உலகில் உள்ள மிகப்பெரிய பள்ளி வாசல்களில் ஒன்றாகும்.

**4. தாஜ்மஹால்:**
1. தாஜ்மஹால் யமுனை ஆற்றங்கரையில் ஆக்ரா நகரில் அமைந்துள்ளது.
2. ஷாஜஹான் தனது அன்பு மனைவி மும்தாஜின் நினைவாக கட்டப்பட்டதாகும்.
3. ஏழு உலக அதிசயங்களில் தாஜ்மஹால் ஒன்றாக கருதப்படுகிறது.
4. உஸ்தாத் இஷா என்ற தலைமை சிற்பியின் மேற்பார்வையில் 22 ஆண்டு கால கடின உழைப்பில் 20 இலட்சம் செலவில் இந்த அழகுமாளிகை கட்டப்பட்டது.

**5. மயிலாசனம்:**
1. விலை மதிப்பற்ற கற்களை யன்படுத்தி மயிலாசனத்தை உருவாக்கி அதில் புகழ்பெற்ற கோஹினூர் வைரத்தை பதிக்கச்செய்தார்.

**2. மொகலாயர்களின் ஆட்சிமுறையை விளக்குக.**

**1. மைய நிர்வாகம்:**
1. மொகலாயர்களின் ஆட்சிமுறை இராணுவம் சார்ந்த வல்லாட்சியாகும்.
2. பேரரசர் இறைவனின் நிழலாக கருதப்பட்டார்.
3. அமைச்சரவையில் வசீர் அல்லது தலைமை அமைச்சர் முக்கிய அமைச்சராக கருதப்பட்டார்.

**2. மாகாண நிர்வாகம்:**
1. நிர்வாக வசதி கருதி பேரரசு பல்வேறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டு இருந்தன.

2. பேரரசு 15 சுபாக்களாக பிரிக்கப்பட்டிருந்தது.
3. சுபாவினை நிர்வாகம் செய்தவர் சுபேதார் எனப்பட்டார்.
4. சுபாக்கள் பல்வேறு சர்க்கார்கள் அல்லது மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன.
5. சர்க்கார்கள் பல பர்கானாக்களாகவும், பர்கானாக்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

**3. வருவாய் நிர்வாகம்:**

1. பேரரசின் முக்கிய வருவாய் நில வரியாகும்.
2. நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.
3. நிலத்தின் வளத்தினை அடிப்படையாக கொண்டு நிலம் மூன்று வகையாக பாகுபாடு செய்யப்பட்டது.
4. மொத்த வருவாயில் 1/ 3 பங்கு நிலவரியாக பெறப்பட்டது.

**4. இராணுவ நிர்வாகம்:**

1. இராணுவம் தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை, பீரங்கி படையினை உள்ளடக்கி இருந்தது.
2. மன்சப்தர்கள் குதிரைப்படையை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் தரம் நிர்ணயிக்கப்பட்டது.

**5. நீதிநிர்வாகம்:**

1. தலைமைக்காசி பேரரசருக்கு நீதி பரிபாலனம் செய்ய உதவினார்.
2. புனித நூலான குரானின் உதவிக்கொண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டன.
3. கை, கால் வெட்டப்படுதல் சாதாரண தண்டனையாக கருதப்பட்டது.

# 2. மராத்தியர்கள்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. தக்காணம் மற்றும் மராத்திய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் **மராத்தியர்கள்** எனப்பட்டனர்.
2. தக்காணத்தை ஆட்சி செய்த **ஷியா** பிரிவைச் சார்ந்த அரசர்களிடம் மராத்தியர்கள் பணியாற்றி வந்தனர்.
3. **கொரில்லா** என்ற முறையை போர் முறையை மராத்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர்.
4. கொரில்லா போர் முறை **முறை சாரா போர்** முறையாகும். மராத்தியர்கள் மலைகளுக்கிடையே ஒளிந்துகொண்டு திடீரென்று எதிரிகளை தாக்கும் முறையாகும்.
5. பக்தி இயக்கத் தலைவர்களான **துக்காராம், ராம்தாஸ்** மற்றும் **வாமன்பண்டித்** போன்றோர் கடவுள் பக்தியையும், வலிமையான தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வையும் தோற்றுவித்தனர்.
6. பூனாவிற்கு அருகிலுள்ள **சிவனேரி** கோட்டையில் கி.பி.1627 ஆம் ஆண்டு சிவாஜி பிறந்தார். இவரது பெற்றோர் **ஷாஜிபான்ஸ்லே** மற்றும் **ஜிஜாபாய்** ஆவர்.
7. ஷாஜி பான்ஸ்லே துக்காபாய் என்பவரை இரண்டாவது திருமணம் செய்துகொண்டதால் முதல் மனைவி ஜிஜாபாய் மற்றும் மகன் சிவாஜியை புறக்கணித்தார்.
8. **தாதாஜிபாய் கொண்டதேவ்** சிவாஜியின் காப்பாளர் ஆனார். இவரின் குரு குதிரைப்பயிற்சி மற்றும் நிர்வாகப் பயிற்சிகளை பயிற்றுவித்தார்.
9. சிவாஜி புரந்தர், ரெய்கார், தோர்னா மற்றும் கல்யாண் கோட்டைகளை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி 1646-ல் கைப்பற்றினார்.
10. **பீஜப்பூர் சுல்தான்** சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டு வரும்படி **அப்சல்கான்** என்பவரை கி.பி 1659-ல் அனுப்பினார்.
11. முகலாய மன்னராக பொறுப்பேற்ற ஔரங்கசீப் தனது தக்காண ஆளுநர் செயிஷ்டகானை கி.பி 1660ல் சிவாஜியை அடக்க அனுப்பினார்.
12. ஔரங்கசீப் சிவாஜியை அடக்க **ராஜா ஜெய்சிங்** என்பவரை அனுப்பினார். சிவாஜியை முகலாயர் படை சூழ்ந்துகொண்டதால் கி.பி 1665ஆம் ஆண்டு **புரந்தர் உடன்படிக்கையில்** கையெழுத்திட்டார்.
13. ஔரங்கசீப் சிவாஜியை **மலை எலி** என்றும் **தக்காண புற்றுநோய்** என்றும் அழைத்தார்.
14. கி.பி 1674-ஆம் ஆண்டு ரெய்கார் கோட்டையில் சிவாஜியின் முடிசூட்டு விழா நடைபெற்றது. அதில் சிவாஜி **'சத்ரபதி'** எனற பட்டத்தை சூட்டிக்கொண்டார்.
15. சிவாஜியின் பேரரசு மைசூர், கொங்கன் மற்றும் மஹாராஷ்டிரா வரை பரவியிருந்தது. 1680-ஆம் ஆண்டு சிவாஜி ரெய்காரில் உயிர் துறந்தார்.
16. சிவாஜி தனக்கு நிர்வாகத்தில் உதவி செய்ய 8 நபர்களை கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைத்தார். இது **அஷ்டப்பிரதான்** எனப்பட்டது.
17. **அஷ்டப் பிரதான்:**

| | |
|---|---|
| 1. பீஷ்வா - பிரதம அமைச்சர் | 2. மந்திரி - காலமுறை அமைச்சர் |
| 3. சச்சிவா - உள்துறை அமைச்சர் | 4. சுமந்த் - வெளியுறவு அமைச்சர் |
| 5. சேனாதிபதி - இராணுவ அமைச்சர் | 6. அமத்தியா - நிதி அமைச்சர் |

7. பண்டிட் ராவ் - சமயத் தலைவர் 8. நியாயதீஷ்-தலைமை நீதிபதி

18. சிவாஜியின் பேரரசு **சுயராஜ்யம்** என்று அழைக்கப்பட்டது.
19. சிவாஜி **ஜமீன்தாரி** முறையை ஒழித்தார். விளைச்சலில் ஐந்தில் இரண்டு பகுதி அரசின் பங்காக பங்காக நிர்ணயிக்கப்பட்டது.
20. நிலவரித்திட்டம் அக்பர் காலத்தில் **இராஜாதோடர்மால்** பின்பற்றிய முறையை ஒட்டி அமைந்திருந்தது. **சவுத், சர்தேஷ்முகி** என்ற இரண்டு முக்கிய வரிகள் வசூலிக்கப்பட்டன.
21. **பட்டேல்** என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார். அனைத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீட்டினை **நியாயதீஷ்** என்ற அதிகாரி விசாரணை செய்தார்.
22. சிவாஜியின் இராணுவத்தில் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, யானைப்படை, ஒட்டகப்படை மற்றும் கப்பற்படை இடம் பெற்றிருந்தன. **குதிரைப்படை** முக்கிய படைப்பிரிவாக கருதப்பட்டது.
23. இராணுவம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் போது எவ்வித சேதத்தையும் ஏற்படத்துக்கூடாது என ஆணையிடப்பட்டிருந்தது.
24. சிவாஜியின் மரணத்தை தொடர்ந்து அவரது மூத்த மகன் **சாம்பாஜி** பேரரசராக பொறுப்பேற்றார்.
25. ஷாகு கி.பி 1708ஆம் ஆண்டு மராத்திய பேரரசராக பொறுப்பேற்றார். அதற்கு **பாலாஜி விஸ்வநாத்** என்பவர் மூலக்காரணமாக விளங்கினார்.
26. பாலாஜி விஸ்வநாத்தை **பீஷ்வா** அல்லது பிரதம அமைச்சராக ஷாகு நியமனம் செய்தார்.
27. மராத்திய பேரரசில் பிரதம அமைச்சர்கள் **பீஷ்வாக்கள்** என்றழைக்கப்பட்டனர். கி.பி 1713ஆம் ஆண்டில் பீஷ்வாக்களின் ஆட்சி தொடங்கியது.
28. மராத்திய மன்னர் ஷாகுவின் ஆட்சிக்குபின் பாலாஜி விஸ்வநாத் முதல் பீஷ்வாவாக பொறுப்பேற்றார்.
29. பீஷ்வாக்களில் தலைசிறந்தவர் **பாஜிராவ்** ஆவார்.அவர் **முற்போக்கு கொள்கையை** கடைபிடித்தார்.
30. **பீஷ்வா பாலாஜி பாஜிராவ்** மூன்றாவது பீஷ்வா ஆவார். அவர் பஞ்சாபைக் கைப்பற்றி அட்டாக் கோட்டையில் மராத்திய கொடியை பறக்கவிட்டார்.
31. வரலாற்று புகழ்மிக்க பானிப்பட் சமவெளியில் கி.பி 1761ல் சதாசிவராவ் தலைமையிலான மராத்திய படைகளை சந்தித்தார். இது **மூன்றாம் பானிப்பட் போர்** என்றழைக்கப்படுகிறது.
32. மராத்தியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை மற்றம் கொள்ளையடித்தல் கொள்கை தோல்விக்கு வழி வகுத்தது.
33. பாரசீகத்தில் தோன்றிய தலைசிறந்த போர்வீரராக **நாதிர்ஷா** விளங்கினார்.இவர் கி.பி 1739-ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுத்தார்.
34. நாதிர்ஷா டெல்லியில் தங்கி தனது மனம் போனபடி சூறையாடினார். **கோஹினூர் வைரம்** மற்றும் மயிலாசனத்தையும் கொள்ளையிட்டார். இவர் 1747-ல் தனது படைவீரர்களாலேயே கொல்லப்பட்டார்
35. **நாதிர்ஷாவின் படையெடுப்பு** இந்தியாவை **இரத்த பூமியாக** மாற்றியது.
36. ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வந்த **அப்தாலி** இனப்பிரிவின் தலைவர் அகமது ஷா அப்தாலி ஆவார். இவர் 1767ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக பஞ்சாப் மீது படையெடுத்தார்.
37. அகமது ஷா அப்தாலியின் படையெடுப்பு மராத்திய மற்றும் முகலாயர்களின் ஆட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியதால் **ஆங்கிலேயர்கள்** தங்கள் இறையாண்மையை இந்தியாவில் நிலைநாட்டினர்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **சிவாஜியின் காப்பாளர்…….**
   **அ) தாதாஜி கொண்ட தேவ்** ஆ) ஷாஜி பான்ஸ்லே இ) பாஜிராவ்
2. **சிவாஜியின் அமைச்சரவைக்குழுவான அஷ்டப்பிரதானில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை…..**
   அ) 7 **ஆ) 8** இ) 9
3. **முதல் பீஷ்வா ………. ஆவார்.**
   **அ) பாலாஜி விஸ்வநாத்** ஆ) பாலாஜி பாஜிராவ் இ) பாஜிராவ்
4. **புரந்தர் உடன்படிக்கை ……. என்பவருக்கும் சிவாஜிக்கும் இடையே ஏற்பட்டது.**
   **அ) ராஜாஜெய்சிங்** ஆ) அப்சல்கான் இ) செயிஸ்டகான்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மராத்தியர்கள் **கொரில்லா** போர் முறையை பின்பற்றினார்கள்.
2. பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை அடக்க **அப்சல்கான்** என்பவரை அனுப்பினார்.
3. மராத்திய பேரரசில் பிரதம அமைச்சர் **பீஷ்வாக்கள்** என்றழைக்கப்பட்டார்.
4. ஔரங்கசீப்பின் மரணத்திற்கு பிறகு **முதலாம் பகதூர் ஷா** முகலாய மன்னரானார்.

**III. பொருத்துக.**

1. பாஜிராவ் - அ. பாரசீகம்
2. நாதிர்ஷா - ஆ. அஷ்டப்பிரதான்
3. நியாயதீஷ் - இ. ஆப்கானிய அரசர்
4. அகமது ஷா அப்தாலி - ஈ. முற்போக்கு கொள்கை

**விடைகள்**
**1. ஈ**
**2. அ**
**3. ஆ**
**4. இ**

**IV. ஒரு வார்த்தையில் விடையளி.**

**1. மூன்றாவது பானிப்பட் போர் எந்த ஆண்டு நடைப்பெற்றது?**
கி.பி 1761

**2. இந்தியா மீது நாதிர்ஷா எந்த ஆண்டு படையெடுத்தார்?**
கி.பி.1739

**3. புரந்தர் உடன்படிக்கை எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?**
கி.பி 1665

**4. "மலை எலி" என்றழைக்கப்பட்டவர் யார்?**
சிவாஜி

**V.குறுகிய விடையளி.**

**1. சிவாஜிக்கும் அப்சல்கானுக்கும் இடையே நடைப்பெற்ற மோதலைப் பற்றி சுருக்கமாக விளக்கு.**
1. பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டு வரும்படி அப்சல்கான் என்பவரை அனுப்பினார்.
2. அப்சல்கான் சிவாஜியை கழுத்தை நெறித்து கொலை செய்ய முயன்றார்.
3. சிவாஜி தனது உடையில் மறைத்து வைத்திருந்த புலி நகத்தால் அப்சல்கானை கொலை செய்தார்.

**2. சிவாஜி செயிஸ்டகானை எவ்வாறு எதிர்த்தார்?**
1. ஔரங்கசீப் தக்காண ஆளுநர் செயிஸ்டகானை 1660-ஆம் ஆண்டு சிவாஜியை அடக்க அனுப்பினார்.
2. பூனா என்ற இடத்தில் முகாமிட்டிருந்த செயிஸ்டகானை கொல்ல சிவாஜி மாறுவேடம் பூண்டு சென்றார்.
3. சிவாஜி செயிஸ்டகானை தாக்க முற்பட்டபோது கட்டைவிரல் துண்டிக்கப்பட்ட நிலையில் உயிர் தப்பினார்.

**3. மூன்றாம் பானிப்பட் போரில் மராத்தியர்கள் தோல்வியுற காரணங்கள் யாவை?**
1. அகமது ஷா அப்தாலியின் இராணுவம் சிறந்த பயிற்சி பெற்று கட்டுப்பாட்டுடன் விளங்கியது.
2. மராத்தியர்களின் தலைவர்கள் அகமது ஷா அப்தாலிக்கு எந்த விதத்திலும் இணையானவர்கள் அல்ல.
3. மராத்தியர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கவில்லை.

**4. நாதிர்ஷாவின் இந்தியப் படையெடுப்பு பற்றி குறிப்பு எழுதுக.**
1. நாதிர்ஷா கி.பி 1739ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுத்தார்.
2. இந்தியாவின் இயற்கை செல்வத்தை கொள்ளையடிக்க நாதிர்ஷா விரும்பினார்.
3. இந்தியாவை ஆட்சி செய்த முகமது ஷா நாட்டினை ஆளும் திறமையற்றவர் என்பதை உணர்ந்து இந்தியாவின் படையெடுக்க முடிவு செய்தார்.

**VI. விரிவான விடையளி.**

**1. சிவாஜியின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றி விவரி.**
**சிவாஜியின் வாழ்க்கை வரலாறு:**
1. பூனாவிற்கு அருகில் உள்ள சிவனேரி கோட்டையில் கி.பி 1627 ஆம் ஆண்டு சிவாஜி பிறந்தார்.
2. சிவாஜியின் பெற்றோர் ஷாஜி பான்ஸ்லே மற்றும் ஜிஜாபாய் ஆவர்.
3. தாதாஜி கொண்ட தேவ் சிவாஜியின் காப்பாளர் ஆவார்.
4. சிவாஜி தன் குருவின் மூலம் குதிரைப்பயிற்சி மற்றும் நிர்வாகப்பயிற்சிகளை மேற்கொண்டார்.

**சிவாஜியின் சாதனைகள்:**
1. சிவாஜியின் பேரரசு மைசூர், கொங்கன் மற்றும் மஹாராஷ்டிரா வரை பரவியிருந்தது.
2. ஜமீன்தாரி முறையை சிவாஜி ஒழித்தார்.
3. இந்து மதச்சட்டங்களின் அடிப்படையில் நீதிநிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.
4. கட்டுப்பாடான நிரந்தர இராணுவத்தைப் பராமரித்தார்.
5. இராணுவத்தில் குதிரைப்படை குதிரைப்படை முக்கிய இடம் பெற்றிருந்தது.

**2. மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்களை விளக்குக.**
**மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்கள்:**
1. மராத்தியர்களின் ஆக்கிரமிப்பு கொள்கை, கொள்ளையடித்தல் கொள்கை தோல்விக்கு வழிவகுத்தது.

2. மராத்தியர்களின் இராணுவத்தைவிட அகமது ஷா அப்தாலியின் இராணுவம் சிறந்த பயிற்சி பெற்று கட்டுப்பாட்டுடன் விளங்கியது.
3. மராத்தியர்களின் தலைவர்கள் அகமது ஷா அப்தாலிக்கு எந்த விதத்திலும் இணையானவர்கள் அல்ல.
4. மராத்தியர்கள் தங்கள் இனத்தவர்களின் ஆதரவை இழந்தனர்.
5. மூன்றாம் பானிப்பட் போருக்கு பிறகு மராத்திய பேரரசை திறமையற்ற பீஷ்வாக்கள் ஆட்சி செய்தனர்.

# 3. ஐரோப்பியர்கள் வருகை

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே மிகப் பழங்காலந்தொட்டே இருந்த வாணிபத்தொடர்பு **அலெக்ஸாண்டர்** வருகையால் மேலும் வலுவடைந்தது.
2. இந்தியப்பொருட்களான பட்டு, நறுமணப்பொருட்கள் மற்றும் மஸ்லின் கைத்தறி ஆடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல தேவை ஏற்பட்டது.
3. இந்தியாவிலிருந்து மிளகு, பட்டை, மிளகாய், இஞ்சி, தேங்காய், சர்க்கரை, சாயப்பொருட்கள் போன்றவை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.
4. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் காஸ்பியன் கடல் போன்ற **மூன்று வழித்தடங்கள்** மூலம் நடைப்பெற்றது.
5. கி.பி.1453ஆம் ஆண்டு ஆட்டோமானிய துருக்கியர்கள் **காண்ஸ்டான்டிநோபிள்** நகரத்தை கைப்பற்றி ஐரோப்பிய வணிகர்களுக்கு இடையூறு தந்தனர்.
6. ஐரோப்பியர்கள் எப்படியாவது இந்தியப்பொருட்களை பெற வேண்டும் என்ற நோக்கில் இந்தியாவிற்கு கடல் வழி காணும் முயற்சியில் இறங்கினர்.
7. இந்தியாவிற்கு கடல் வழி கண்டுபிடிக்கும் முதலில் இறங்கியவர்கள் **போர்ச்சுகீசியர்கள்** ஆவார்.
8. போர்ச்சுகீசிய மன்னரான இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்க அறிவியல் முறையில் அமைந்த பள்ளி ஒன்றைத் தொடங்கினார். இதனால் **மாலுமி ஹென்றி** எனப்பட்டார்.
9. போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த **பார்த்தலோமியா டயஸ்** என்பவர் கி.பி 1487-ம் ஆண்டு முதன்முதலில் கடல் பயணத்தினை மேற்கொண்டார்.
10. பார்த்தலோமியா டயஸ் ஆப்பிரிக்காவின் தென்கோடிமுனைக்கு **புயல் முனை** என்று பெயரிட்டார். இதனை கடந்தால் பல புதிய பகுதிகளை காணலாம் என்பதால் **"நன்னம்பிக்கை முனை"** என அழைக்கப்பட்டது.
11. போர்ச்சுகீசிய மாலுமியான **வாஸ்கோடகாமா** நன்னம்பிக்கை முனையை கடந்து மே-27, 1498-ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள **கோழிக்கோடு** வந்தடைந்தார்.
12. கள்ளிக்கோட்டை மன்னர் சாமரின் வாஸ்கோடகாமை வரவேற்று போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்யத் தொடங்கினார்.
13. **கள்ளிக்கோட்டை, கொச்சின், கண்ணணூர்** ஆகிய இடங்களில் வாணிபத்தலங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர்.
14. இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வாணிபத்தை கவனிக்க **பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா** என்பவர் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
15. பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா இந்தியப்பெருங்கடலில் போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கை உறுதி செய்தார். இவரது கொள்கை **"நீலநீர்க்கொள்கை"** ஆகும்.
16. **அல்புகர்க்கு** பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி 1510-ஆம் ஆண்டு கோவாவை கைப்பற்றி அதனை தலைநகரமாக மாற்றினார்.
17. பாரசீக வளைகுடாவில் **ஆர்ம்ஸ்** என்ற இடத்தில் துறைமுகம் ஒன்றினைக் அல்புகர்க்கு கட்டினார்.
18. 1000 ஆண்டுகளுக்கு பிறகு போர்ச்சுகீசியர்களின் ஆட்சி இந்தியாவில் வீழ்ச்சியடைய தொடங்கியது.
19. அல்புகர்க்கு பின் வந்தவர்கள் திறமையற்றவர்கள். இவர்களால் போர்ச்சுகீசியரின் செல்வாக்கை கட்டிக்காக்க முடியவில்லை.
20. போர்ச்சுகீசியர்கள் வலுக்கட்டாயமாக மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இந்தியர்களை கிறித்தவ மதத்திற்கு மாற்றினார்கள்.
21. விஜயநகர பேரரசு கி.பி 1565-ல் நடைபெற்ற தலைக்கோட்டை போருக்குபின் வீழ்ச்சியுறத் தொடங்கியது.
22. டச்சு, ஆங்கிலேயர்களின் வருகை போர்ச்சுகீசியரின் செல்வாக்கை இந்தியாவில் வீழ்ச்சியடைய செய்தது.
23. கி.பி. 1602-ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டைச் சேர்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து **டச்சு கிழக்கிந்திய கம்பெனி** என்ற நிறுவனத்தை தோற்றுவித்தனர்.

24. டச்சுகாரர்கள் கி.பி.1610-ஆம் ஆண்டு **புலிகட்** என அழைக்கப்படும் பழவேற்காட்டில் தங்கள் வாணிப தலத்தை நிறுவி கோட்டை ஒன்றைக்கட்டினார். இது டச்சுக்காரர்களின் தலைமையிடமாகும்.
25. சூரத், புரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, காசிம்பஜார் போன்ற இடங்களில் வாணிபத்தலங்களை டச்சுக்காரர்கள் நிறுவினர்.
26. கி.பி 1623-ஆம் ஆண்டு அம்பாய்னா என்ற இடத்தில் டச்சுக்காரர்கள் ஆங்கில வியாபாரிகளை கொன்றனர். இது **அம்பாய்னா படுகொலை** எனப்பட்டது.
27. கி.பி.1588ஆம் ஆண்டு உலகின் மிகப்பெரிய போர்க்கப்பலான **"ஸ்பானிய ஆர்மடா"** என்ற கப்பலை ஆங்கிலேயர்கள் தோற்கடித்ததன் மூலம் ஐரோப்பாவில் இங்கிலாந்து கடல்வலிமை பெற்ற நாடாகியது.
28. 100 இலண்டன் வியாபாரிகள் ஒன்று சேர்ந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை தோற்றுவித்தனர்.
29. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு டிசம்பர்-31,1600-ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி **முதலாம் எலிசபெத்** வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்.
30. **வில்லியம் ஹாக்கின்ஸ்** என்ற ஆங்கில மாலுமி, ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்தார்.
31. கி.பி 1615ஆம் ஆண்டு **சர்தாமஸ் ரோ** என்ற மற்றொரு ஆங்கில மற்றும் ஜஹாங்கீர் அரசவைக்கு வருகை புரிந்தார்.
32. கி.பி 1639-ஆம் ஆண்டு **பிரான்சிஸ் டே** என்ற ஆங்கில அதிகாரி சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி தற்கால சென்னை நகரை நிறுவினார்.
33. **இரண்டாம் சார்லஸ்** போர்ச்சுகல் இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்து கொண்டார். கி.பி 1640-ஆம் ஆண்டு **புனித ஜார்ஜ்கோட்டை** கட்டப்பட்டது.
34. கி.பி 1699-ஆம் ஆண்டு முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் அனுமதி பெற்று கல்கத்தாவில் மற்றொரு வாணிப மையத்தை ஏற்படுத்தினார்.
35. இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக **வில்லியம் கோட்டை** கட்டப்பட்டது.
36. டென்மார்க் நாட்டைச் சார்ந்த மக்கள் **டேனியர்கள்** எனப்பட்டனர்.
37. டேனியர்கள் கி.பி 1620-ஆம் ஆண்டு தரங்கம்பாடியிலும், 1676-ஆம் ஆண்டு வங்காளத்திலுள்ள சீராம்பூர் என்ற இடத்திலும் வாணிப மையங்களை ஏற்படுத்தினார்.
38. பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான **கால்பர்ட்** என்பவரின் முயற்சியால் **பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி** கி.பி 1664-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
39. பிரெஞ்சுகாரர்கள் கி.பி 1668-ஆம் ஆண்டு சூரத்திலும், கி.பி 1669-ஆம் ஆண்டு மசூலிப்பட்டினத்திலும் வாணிபத்தலங்களை நிறுவினர்.
40. கி.பி 1674ஆம் ஆண்டு தஞ்சாவூர் மன்னரிடமிருந்து சென்னைக்கு தெற்கே ஒரு நிலப்பகுதியை பெற்று **பாண்டிச்சேரியை** டச்சுக்காரர்கள் நிறுவினர்.
41. டச்சுக்காரர்கள் கி.பி 1725-ஆம் ஆண்டு மாஹியையும், கி.பி 1739-ஆம் ஆண்டு காரைக்காலையும் பெற்றனர்.
42. கி.பி 1742ஆம் ஆண்டு **டியூப்ளே** பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் மேலும் வளர்ச்சி அடைந்தது.
43. ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுகாரர்களுக்கும் ஆதிக்கப்போட்டி துவங்கியது. இது இந்தியாவில் **கர்நாடக போர்களாக** பிரதிபலித்தது.
44. கர்நாடக போர்களின் இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றிப்பெற்று இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். பிரெஞ்சுகாரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாபெரும் வாணிப மையமான ………….. ஆட்டோமானிய துருக்கியர்களால் கி.பி 1453-ல் கைப்பற்றப்பட்டது.**

அ) ஆப்கானிஸ்தான் **ஆ) கான்ஸ்டான்டிநோபிள்** இ) பலுசிஸ்தான்

**2. ………..முதல் போர்ச்சுகீசியரின் ஆளுநராவார்.**

**அ) பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா** ஆ)அல்போன்ஸா-டி-அல்புகர்க்கு இ) பார்த்தலோமியோ டயஸ்

**3. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்ட ஆண்டு……**

**அ) கி.பி 1600** ஆ) கி.பி 1644 இ) கி.பி 1664

**4. இந்தியாவில் பிரெஞ்சுகாரர்கள் தலைமையிடமாக ………. விளங்கியது.**

அ) சந்திரநாகூர் **ஆ) பாண்டிச்சேரி** இ) மாஹி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. போர்ச்சுசீசியர்கள் கோவாவை **பீஜப்பூர்** சுல்தானிடமிருந்து கைப்பற்றினார்.
2. வில்லியம் ஹாக்கின்ஸ் பயணம் மேற்கொண்ட போது இந்தியாவின் முகலாய மன்னர் **ஜஹாங்கீர்** ஆவார்.

3. கி.பி **1615** ஆண்டு சர் தாமஸ் ரோ இந்தியாவிற்கு வந்தார்.
4. கி.பி 1742 ஆம் ஆண்டு **டியூப்ளே** என்பவர் பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார்.

**III. பொருத்துக.**

1. வாஸ்கோடகாமா - அ. இங்கிலாந்து
2. மாஹி - ஆ. பிரெஞ்சு குடியேற்றம்
3. நறுமணத்தீவுகள் - இ. போர்ச்சுகீசிய மாலுமி
4. முதலாம் ஜேம்ஸ் - ஈ. கிழக்கிந்திய தீவு

**விடைகள்**
**1. இ**
**2. ஆ**
**3. ஈ**
**4. அ**

**IV. ஒரு வார்த்தையில் விடையளி.**

**1. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது?**
கி.பி. 1664

**2. பிரான்சிஸ்டே என்பவர் யார்?**
ஆங்கில அதிகாரி

**3. புனித ஜார்ஜ் கோட்டை எங்கு அமைந்துள்ளது?**
சென்னை

**4. நன்னம்பிக்கை முனை எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது?**
ஆப்பிரிக்கா

**V. குறுகிய விடையளி.**

**1. போர்ச்சுகீசியரின் ஆதிக்கம் இந்தியாவில் வீழ்ச்சியடைய மூன்று காரணங்களை கூறுக.**
1. அல்புகர்க்குக்கு பின் வந்தவர்கள் திறமையற்றவர்கள்.
2. போர்ச்சுகீசியர்கள் ஏராளமான இந்தியர்களை கிறித்துவ மதத்திற்கு மாற்றினார்கள்.
3. போர்ச்சுகீசியர்கள் விஜயநகர பேரரசுடன் மட்டுமே உறவு கொண்டிருந்ததனால் இப்பேரரசு வீழ்ச்சியடைய தொடங்கியவுடன் போர்ச்சுகீசியரும் தம் வலிமையை இழந்தனர்.

**2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி எவ்வாறு பம்பாயைப் பெற்றது?**
1. இங்கிலாந்து அரசர் போர்ச்சுகல் நாட்டு இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
2. காத்தரினுக்கு சீர்வரிசையாக பம்பாய் கொடுக்கப்பட்டது.
3. பம்பாயை சார்லஸ் ஆங்கிலகிழக்கிந்திய கம்பெனிக்கு ஆண்டொன்றுக்கு 10-பவுண்டு வாடகைக்கு விட்டார்.

**3. இந்தியாவில் பிரெஞ்சுகாரர்களின் வாணிப மையங்களை குறிப்பிடுக.**
பாண்டிச்சேரி, சந்திரநாகூர், மாஹி, காரைக்கால்

**4. அல்புகர்க்கு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**
1. போர்ச்சுகீசியரின் இரண்டாவது ஆளுநராக அல்புகர்க்கு பதவியேற்றார்.
2. பீஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510-ஆம் ஆண்டு கோவாவைக் கைப்பற்றி அதனை தலைநகரமாக மாற்றினார்.
3. இவர் இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை உண்மையாக நிலைநாட்டியவர் எனப் போற்றப்படுகிறார்.

**VI. விரிவான விடையளி.**

**1. இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வளர்ச்சி பற்றி விவரி.**
1. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி நூறு இலண்டன் வியாபாரிகளால் தோற்றுவிக்கப்பட்டது.
2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு 1600-ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்.
3. கி.பி 1639-ஆம் ஆண்டு பிரான்சிஸ் டே என்ற ஆங்கில அதிகாரி சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி தற்கால சென்னை நகரை நிறுவினார்.
4. இரண்டாம் சார்லஸ் போர்ச்சுகல் இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
5. கி.பி 1640-ஆம் ஆண்டு புனித ஜார்ஜ்கோட்டை கட்டப்பட்டது.
6. இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக வில்லியம் கோட்டை கட்டப்பட்டது.
7. ஆங்கிலேயர்கள் தீவிரமாக இந்தியாவுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
8. ஆங்கிலகிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம் 1858-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் விரிவுபடுத்தப்பட்டது.

**2. டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஏற்படுத்திய வாணிப மையங்களை பற்றி எழுது.**
**டச்சுகாரர்களின் வாணிப மையங்கள்:**
1. நறுமணத்தீவுகளின் மீது அதிகம் நாட்டம் கொண்டனர்.
2. இந்தியாவில் சின்சுரா, நாகப்பட்டினம், சூரத் மற்றும் மசூலிப்பட்டினத்தில் வாணிப மையங்களை நிறுவினர்.

3. கி.பி.1610-ல் பழவேற்காட்டில் கோட்டை ஒன்றை ஏற்படுத்தினர். இது டச்சுகாரர்களின் தலைமையிடமாகும்.
4. புரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, காசிம்பஜார் போன்ற இடங்களில் வாணிபத்தலங்களை நிறுவினார்.

**பிரெஞ்சுகாரர்களின் வாணிப மையங்கள்:**

1. பிரெஞ்சுகாரர்கள் கி.பி 1668-ல் சூரத்திலும், கி.பி.1669-ல் மசூலிப்பட்டினத்திலும் நிறுவினர்.
2. பாண்டிச்சேரி பிரெஞ்சுகாரர்களின் தலைமையிடமாக மாறியது.
3. கி.பி.1690-ல் சந்திரநாகூரிலும், கி.பி.1725-ல் மாஹியையும், கி.பி.1739-ல் காரைக்காலையும் பெற்றனர்.

# 4. ஆங்கில-பிரெஞ்சு ஆதிக்கப்போட்டி (கர்நாடகப் போர்கள்)

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. ஆங்கில மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனிகள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன.
2. கி.பி.1740 - கி.பி.1763 இடைப்பட்ட காலங்களில் ஆங்கிலேய பிரெஞ்சுகாரர்களிடையே மூன்று போர்கள் நடைபெற்றன. இவை **கர்நாடக போர்கள்** எனப்பட்டன.
3. **ஆற்காடு** கர்நாடகத்தின் தலைநகர் ஆகும். ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுகாரர்களும் தங்களை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர்.
4. கர்நாடக போர்களின் முடிவில் பிரெஞ்சுகாரர்கள் இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டனர். கர்நாடகம் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
5. **முதல் மைசூர்ப்போர்** ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போரின் பிரதிபலிப்பாகும்.
6. பாண்டிச்சேரி கவர்னர் **டியூப்ளே** இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாக கொண்டிருந்தார். இது போருக்கு வித்திட்டது.
7. பிரெஞ்சு கவர்னரான டியூப்ளேயும் மொரிஷியஸ் கவர்னரான **லா போர்டொனால்ஸ்** உடன் சேர்ந்து சென்னையை முற்றுகையிட்டனர். இதனை கர்நாடக நவாப் அன்வாருதீன் விரும்பவில்லை.
8. டியூப்ளே ஆங்கிலேயருக்கு சொந்தமான புனித டேவிட் கோட்டையை கைப்பற்ற முயற்சித்தார். எனவே ஐரோப்பாவில் நடைபெற்ற வந்த **ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர்** கி.பி 1748- ஆம் ஆண்டு முடிவுற்றது.
9. முதல் கர்நாடகப்போர் **அய்லா ஷபேல்** உடன்படிக்கையின் படி 1748-ல் முடிவடைந்தது. இதன்படி ஆங்கிலேயருக்கு மீண்டும் சென்னை கிடைத்தது.
10. ஹைதராபாத்திலும், கர்நாடகத்திலும் ஏற்பட்ட வாரிசுரிமைபோர் இரண்டாவது கர்நாடக போராக மாறியது.
11. ஹைதராபாத்தின் **நிஜாம் அஷப்ஷா** மறைவிற்கு பின் அவரது மகன் **நாசிர்ஜங்** மறும் பேரன் முசபர் ஜங்கிற்கும் இடையே வாரிசுரிமைப்போர் ஏற்பட்டது.
12. முஷபர் ஜங் மற்றும் சந்தாசாகிப்பை **பிரெஞ்சுகாரர்கள்** ஆதரித்தனர். நாசர்ஜங் மற்றும் அன்வாருதீன் ஆங்கிலேயர்களின் உதவியை நாடினர்.
13. வாரிசுரிமைப்போட்டியினால் 1748ஆம் ஆண்டு **இரண்டாவது கர்நாடக போர்** ஆரம்பமாகியது.
14. பிரெஞ்சுகாரர்களின் உதவியோடு முஷபர் ஜங் மற்றும் சந்தாசாகிப் 1749-ல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் அன்வாருதீனை கொன்றனர். **சந்தாசாகிப்** கர்நாடக நவாப்பானார்.
15. நாசர்ஜங் மற்றும் முஷபர்ஜங் இருவரும் கொல்லப்பட்டனர். பிரெஞ்சு தளபதி புஸ்ஸி, **சலபெத் ஜங்கினை** ஹைதராபாத் நிஜாமாக நியமனம் செய்தார்.
16. **இராபர்ட் கிளைவ்** கர்நாடகத்தின் தலைநகராகிய ஆற்காட்டை முற்றுகையிட்டு கைப்பற்றினார். இவர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை சிக்கலை தீர்த்து அதற்குப் புத்துயிர் அளித்தார்.
17. இராபர்ட் கிளைவ் ஆற்காட்டை முற்றுகையிட்டு, முகமது அலியை ஆற்காட்டின் நவாப்பாக்கினார். எனவே இராபர்ட் கிளைவ் **ஆற்காட்டு வீரர்** என அழைக்கப்படுகிறார்.
18. இரண்டாவது கர்நாடகப்போர் 1755-ஆம் ஆண்டு **பாண்டிச்சேரி** உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.
19. முகமது அலியை ஆற்காட்டின் நவாப்பாக ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுகாரர்களும் அங்கீகரித்தனர்.
20. கி.பி 1756-ஆம் ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டுப்போரின் எதிரொலியாக இந்தியாவில் **மூன்றாம் கர்நாடகப்போர்** நடைப்பெற்றது.
21. புஸ்ஸி, கவுண்-டி-லாலி இருவரும் இணைந்து சென்னையைத் தாக்கினர். ஆனால் **ஆங்கில தளபதி சர் அயர்கூட்** பிரெஞ்சுப் படையை கி.பி 1760-ஆம் ஆண்டு **வந்தவாசி** போர்க்களத்தில் தோற்கடித்தார்.
22. கி.பி 1761 ஆம் ஆண்டு பிரெஞ்சுத் தளபதி கவுண்-டி-லாலி பாண்டிச்சேரியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். இதனால் பிரெஞ்சுகாரர்களின் ஆதிக்கம் சரிந்து, ஆங்கிலேயர்கள் உயர்வடைந்தனர்.
23. மூன்றாம் கர்நாடகப்போர் 1763-ஆம் ஆண்டு **பாரிஸ்** சமாதான உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது.

24. பிரெஞ்சுகாரர்கள் **பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர், மாஹி** நிலப்பகுதிகளை திரும்பப்பெற்றனர்.
25. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் **தாய்நாட்டின் ஆதரவினையும்**, பொருளாதார உயர்நிலையையும் பெற்றிருந்தது வெற்றிக்கான ஒரு காரணமாகும்.
26. பிரெஞ்சுதளபதி புஸ்ஸி, கவுண்-டி-லாலி சென்னையின் மீது படையெடுத்தது பெரும் தவறாக முடிந்தது.
27. கர்நாடகப்போரில் ஈடுபட்டதினால் இங்கிலாந்து முழுமையான வெற்றியைப் பெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் போக்கை மாற்றியது. இந்தியாவை ஆளும் சக்தியாக இங்கிலாந்து வலுப்பெற்றது.
28. கி.பி. 1757-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கும், சிராஜ்-உத்-தெளலாவிற்கும் ஏற்பட்ட மனவேறுபாடு பிளாசிப்போரில் முடிந்தது.
29. வங்காளத்தில் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நிறுவனங்கள் தங்கள் நிலப்பகுதிகளில் கோட்டைகளைக் கட்டி வலிமைப்படுத்திக் கொண்டன.
30. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் தனக்கு அளிக்கப்பட்டிருந்த வியாபார சலுகைகளை தவறாக பயன்படுத்தியது. இது சிராஜ்-உத்-தெளலாவின் ஆத்திரத்தை தூண்டியது.
31. **சிராஜ்-உத்-தெளலா** பெரும் படையுடன் சென்று கல்கத்தாவை கைப்பற்றி ஆங்கிலேய போர்வீரர்கள் **146 பேரை** பிடித்து சிறையில் அடைத்தார்.
32. சிறையில் இருந்தவர்களில் **23 பேர்** மட்டுமே அடுத்த நாள் உயிருடன் இருந்தனர். இந்நிகழ்வு வரலாற்றில் கல்கத்தா **"இருட்டறை துயரச் சம்பவ நிகழ்ச்சி"** என அழைக்கப்படுகிறது.
33. கி.பி 1757-ஆம் ஆண்டு ஜீன் 23ஆம் நாள் சிராஜ்-உத்-தெளலா, இராபர்ட் கிளைவ் ஆகியோரின் படைகள் கல்கத்தாவிற்கு அருகே உள்ள **பிளாசி** என்ற இடத்தில் போரில் ஈடுபட்டன.
34. மீர்ஜாபர் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தின் பொம்மையாக வங்காளத்தில் செயல்பட்டார்.
35. **மீர்காசிம்** வங்காள நவாப் ஆனபிறகு இந்திய வியாபாரிகளுக்கு உதவிடும் நோக்கில் அவர்கள் செலுத்தி வந்த சுங்க வரியை ரத்து செய்தார்.
36. ஆங்கிலேயப்படை மீர்காசிம்மை தோற்கடித்தது. தோற்கடிக்கப்பட்ட மீர்காசிம் அயோத்தியை ஆட்சி செய்த நவாப் ஷீஜா உத் தெளலாவிடம் அடைக்கலமானார்.
37. இரண்டாம் ஷா ஆலம், ஷீஜா உத் தெளலா மற்றும் மீர்காசிம் ஆகிய மூன்று மன்னர்களும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர்களின் ஆட்சியை இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வர போராடினார்கள்.
38. இரண்டாம் ஷா ஆலம், ஷீஜா உத் தெளலா மற்றும் மீர்காசிம் ஆகியோர்களின் கூட்டுப்படை 1764-ஆம் ஆண்டு அக்டோபர்22-ஆம் நாள் **பக்ஸார்** என்ற இடத்தில் ஆங்கிலேயப் படையை எதிர்க்கொண்டன.
39. ஷுஜா உத் தெளலாவும், இரண்டாம் ஷா ஆலமும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். ஆங்கிலேயர்கள் பிளாசிப்போரில் பெற்ற வெற்றி, பக்சார் போரில் நிலைப்படுத்தப்பட்டது.
40. கி.பி 1765-ஆம் ஆண்டு பக்ஸார் போரின் முடிவில் அலகாபாத் உடன்படிக்கை ஆங்கிலேயர்களுக்கும் இரண்டாம் ஷா ஆலம் மற்றும் ஷீஜா உத் தெளலாவிற்கும் இடையே கையெழுத்திடப்பட்டது.
41. ஷுஜா உத் தெளலா போர் இழப்பீட்டு தொகையாக **50 இலட்சம்** ரூபாயை ஆங்கிலேயர்களுக்கு வழங்கவும் மற்றும் **காரா, அலகாபாத்** ஆகிய நிலப்பகுதிகளை வழங்கவும் ஒத்துக்கொண்டார்.
42. கர்நாடக நிலப்பகுதி, **வங்காளம், பீகார், ஒரிசா** ஆகிய பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆளுகையின் கீழ் வந்தது.
43. **பக்ஸார் போர்** ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் உயர் அதிகாரம் படைத்த ஒரு நிறுவனமாக உயர்த்தியது.
44. பக்ஸார் போருக்கு பிறகு இராபர்ட் கிளைவ் **வங்காள கவர்னராக** 1765-ல் நியமிக்கப்பட்டார்.
45. மைசூரில் ஹைதர் அலி வலிமை மிகுந்த பேரரசை உருவாக்கி இருந்தார். மேலும் அவர் பிரான்சு நாட்டுடன் நல்லுறவில் இருந்தார். இது முதலாவது **ஆங்கில-மைசூர் போருக்கு** வழி வகுத்தது.
46. கி.பி 1766-ஆம் ஆண்டு ஹைதர் அலிக்கு எதிராக இங்கிலாந்து மராத்தியரோடும், ஹைதராபாத் நிஜாமோடும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது.
47. கி.பி.1767-ஆம் ஆண்டு ஹைதர் அலி மற்றும் நிஜாமை ஆங்கிலேயர்கள் **செங்கம்** என்ற இடத்தில் தோற்கடித்தனர்.
48. ஆங்கிலேயர்கள் கி.பி.1769-ஆம் ஆண்டு ஹைதர் அலியோடு **மதராஸ்** அமைதி உடன்படிக்கையில் ஈடுபட்டனர்.
49. மதராஸ் (சென்னை) உடன்படிக்கையின் படி இரு நாடுகளும் தாங்கள் கைப்பற்றிய இடங்களை திரும்ப அளிக்க ஒத்துக்கொண்டன.
50. **ஹைதர் அலி** சாதாரண ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். தன் கடின உழைப்பினால் படைவீரர் நிலையிலிருந்து உயர்ந்து இராணுவத்தின் தலைவரானார்.

51. ஹைதர் அலி இந்துக்களையும் முஸ்லீம்களையும் சமமாக கருதினார்.நீதி பிறழாது அரசாட்சி நடத்தினார்.
52. **இராபர்ட் கிளைவ்** முதலாவது ஆட்சிக்காலத்தில் பெரும் வெற்றி வீரராகவும், இரண்டாவது ஆட்சிக்காலத்தில் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார்.
53. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஊழியர்கள் எவ்விதத்திலும் இந்தியர்களிடமிருந்து **அன்பளிப்பு** பெறக்கூடாது எனக் கூறினர்.
54. கம்பெனி ஊழியர்கள் மற்றும் அவர்களின் விதவைகளுக்கு உதவ **கிளைவின் நிதி** ஒன்றை உருவாக்கினார்.
55. இரண்டாம் ஷா ஆலமிடமிருந்து வங்காளத்தின் **உரிமையியல்** மற்றும் **குற்றவியல் உரிமைகளை** பெற்ற பிறகு இராபர்ட்கிளைவ் **வங்காளத்தில்** இரட்டை ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தினார்.
56. **வங்காள இரட்டை ஆட்சிமுறை** கி.பி 1772-ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. வங்காளம் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நேரடி கட்டுப்பாட்டில் வந்தது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கர்நாடகப்போர்கள் ………….. ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்றது.**
அ) 1736-1740 ஆ) 1740-1744 **இ) 1746-1763**

**2. பிளாசிப்போர் ……… ஆண்டு நடைபெற்றது.**
அ) 1784 **ஆ) 1757** இ) 1765

**3. ஆங்கிலேய பேரரசை இந்தியாவில் தோற்றுவித்தவர் ……….ஆவார்.**
**அ) இராபர்ட் கிளைவ்** ஆ) டியூப்ளே இ) மீர்ஜாபர்

**4. சர் அயர்கூட்……… போரில் கவுண்டி லாலியை தோற்கடித்தார்.**
அ) மெட்ராஸ் ஆ) செயிண்ட தாமஸ் **இ) வந்தவாசி**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கர்நாடகத்தின் தலைநகரம் **ஆற்காடு** ஆகும்.
2. ஆற்காட்டு வீரர் என **இராபர்ட் கிளைவ்** அழைக்கப்பட்டார்.
3. **பக்ஸார்** போர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவில் உயர் அதிகார நிறுவனமாக ஏற்படுத்தியது.
4. லா போர்டொனாய்ஸ் **மொரிஷியஸ்** பிரெஞ்சு ஆளுநர் ஆவார்.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | முதலாவது கர்நாடகப்போர் | - அ. அலகாபாத் ஒப்பந்தம் |
| 2. | மூன்றாவது கர்நாடகப்போர் | - ஆ. கல்கத்தா அருகில் உள்ள கிராமம் |
| 3. | பிளாசி-அய்-லா | - இ. சாப்பேல் |
| 4. | பக்ஸார் போர் | - ஈ. பாரிஸ் உடன்படிக்கை |

**விடைகள்**
**1. இ**
**2. ஈ**
**3. ஆ**
**4. அ**

**IV. ஒரு வார்த்தையில் விடையளி.**

**1. முதல்-ஆங்கிலேய-மைசூர் போர் எந்த உடன்படிக்கையின் படி முடிவடைந்தது?**
மதராஸ் அமைதி உடன்படிக்கை

**2. பிளாசிப்போருக்கு பிறகு வங்காளத்தின் நவாப் யார்?**
மீர்ஜாபர்

**3. பக்ஸார் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?**
கி.பி 1764

**V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.**

**1. இருட்டறை துயரச் சம்பவம் என்றால் என்ன?**
1. சிராஜ்-உத்-தெளலாவின் ஆணைகளை ஆங்கிலேய அரசு ஏற்க மறுத்தது.
2. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் தனது வியாபார சலுகைகளை தவறாகப் பயன்படுத்தியது.
3. எனவே சிராஜ் உத் தெளலா ஆங்கிலேய போர்வீரர்கள் 146 பேர்களை ஒரே அறையில் அடைத்தார்.
4. அடுத்தநாள் அவர்களில் 23 பேரே உயிருடன் இருந்தனர். இது இருட்டறை துயரச் சம்பவம் எனப்பட்டது.

**2. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வெற்றி பெற்றதற்கான மூன்று காரணங்களை கூறுக.**
1. ஆங்கிலேயர்கள் தாய்நாட்டின் ஆதரவு மற்றும் பொருளாதார உயர்நிலையை பெற்றிருந்தனர்.
2. ஆங்கிலேயரின் கடற்படை அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது.
3. ஆங்கிலேய அதிகாரிகளின் ஒற்றுமை உணர்வும் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு முழுமுதற் காரணமாகும்.

**3. இராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சி முறையைப் பற்றி நீ அறிவது யாது?**

1. இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டை ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தினார்.
2. இரட்டை ஆட்சியின் படி ஆங்கில அரசோ அல்லது நவாப்போ மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை.
3. இரட்டை ஆட்சிமுறை கி.பி.1772-ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது.

**4. முதலாவது ஆங்கிலேய-மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?**

1. ஹைதர் அலி உருவாக்கிய வலிமை மிகுந்த பேரரசை ஆங்கிலேயர் வீழ்த்த எண்ணினர்.
2. ஹைதர் அலி பிரான்சோடு கொண்டிருந்த நல்லுறவு ஆங்கிலேய நிர்வாகத்தின் கண்களை உறுத்தியது.
3. இது ஆங்கில மைசூர் போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## VI. விரிவான விடையளி.

**1. இரண்டாவது மற்றும் மூன்றாவது கர்நாடகப் போர்களுக்கான காரணங்களையும், நிகழ்வுகள் மற்றும் விளைவுகளையும் கூறுக.**

**இரண்டாம் கர்நாடகப்போர் (1748 - 1754)**

**1. போருக்கான காரணங்கள்:**

1. ஹைதராபாத் கர்நாடக வாரிசுரிமைப்போர் முக்கிய காரணமாக அமைந்தது.
2. ஹைதராபாத் நிஜாம் மகன் நாசிர் ஜங்குக்கும் பேரன் முஷபர் ஜங்குக்கும் இடையே போட்டிநடைபெற்றது.
3. கர்நாடக நவாப் மகன் அன்வாருத்தீனுக்கும் மருமகன் சந்தா சாகிப்பிற்கும் இடையே போட்டி ஏற்பட்டது.
4. முஷபர் ஜங் மற்றும் சந்தா சாகிப்பை பிரெஞ்சுகாரர்கள் ஆதரித்தனர்.
5. நாசர்ஜங் மற்றும் அன்வாருத்தீனை ஆங்கிலேயர்கள் ஆதரித்தனர்.

**2. போரின் நிகழ்வுகள்:**

1. பிரெஞ்சுகாரர்களின் உதவியோடு முஷபர் ஜங் மற்றும் சந்தாசாகிப் ஆம்பூர் போரில் அன்வாருதீனை தோற்கடித்து கொன்றனர். எனவே சந்தா சாகிப் கர்நாடக நவாப்பானார்.
2. ஹைதராபாத் போரில் நாசர்ஜங் மற்றம் முஷபர் ஜங் இருவரும் கொல்லப்பட்டனர்.
3. சலபெத் ஜங்கினை ஹைதராபாத் நிஜாமாக பிரெஞ்சு தளபதி புஸ்ஸி நியமித்தார்.
4. இராபர்ட் கிளைவ் சந்தா காகிப்பை தோற்கடித்து, ஆற்காட்டை கைப்பற்றி முகமது அலியை நவாப்பாக்கினார்.

**போரின் விளைவுகள்:**

1. 1755-ஆம் ஆண்டு பாண்டிச்சேரி உடன்படிக்கையின் படி இரண்டாம் கர்நாடகப்போர் முடிவுக்கு வந்தது.
2. இதன்படி ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுகாரர்களும் இந்திய சுதேசி சாம்ராஜ்யங்களின் உள்விவகாரங்களில் தலையிடுவது இல்லை என முடிவு செய்யப்பட்டது.
3. இரு நாடுகளும் கைப்பற்றிய நிலப்பகுதிகளை அந்தந்த நாடுகளுக்கு அளித்து விடுவது எனவும் ஒப்புக்கொண்டனர்.
4. ஆற்காட்டின் நவாப்பாக முகமது அலியை இருவரும் ஆதரித்தனர்.

**மூன்றாவது கர்நாடகப்போர் (1756-1763)**

**காரணம்:**

1. கி.பி 1756ஆம் ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டு போரின் எதிரொலியே முக்கிய காரணமாக அமைந்தது.

**போரின் நிகழ்வுகள்:**

1. புஸ்ஸி மற்றும் கவுண்டி-லாலி சென்னையை தாககினர்.
2. கி.பி 1760-ல் பிரெஞ்சுகாரர்களை ஆங்கில தளபதி சர் அயர்கூட் வந்தவாசியிலி தோற்கடித்தார்.
3. 1761-ல் கவுண்-டி-லாலி பாண்டிச்சேரியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்.
4. இதனால் பிரெஞ்சு ஆதிக்கம் சரிவடைந்து ஆங்கிலேயர்கள் உயர்வடைந்தனர்.

**போரின் விளைவுகள்:**

1. மூன்றாம் கர்நாடகப்போர் பாரிஸ் உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது.
2. பிரெஞ்சுகாரர்கள் தங்கள் இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றனர்.
3. பிரெஞ்சுகாரர்கள் தங்கள் செல்வாக்கை இழந்தனர். ஆங்கிலேயர்கள் வலிமையடைய தொடங்கினர்.

# புவியியல்

## 1. வள ஆதாரங்களும் அதன் வகைகளும்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. நமது புவிக்கோள் **பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம்** என்ற மூன்று முக்கிய கூறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.
2. பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் இவற்றில் காணப்படும் எந்த ஒரு பொருளும் மனிதனுக்குப் பயனளிப்பதாக இருப்பின் அது **வளஆதாரம்** எனப்படுகிறது.
3. வளர்ச்சியின் அடிப்படையில் வள ஆதாரங்கள், **இயலாற்றல் வள ஆதாரங்கள்** என்றும் **வளர்ச்சியுற்ற வள ஆதாரங்கள்** என்றும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.
4. மக்களால் பயன்படுத்தப்பட முடியாத சூழலில் உள்ள வளஆதாரங்கள் இயலாற்றல் வளஆதாரங்கள் என அழைக்கப்படுகின்றன. எ.கா **சைபீரியா** மற்றும் **அண்டார்டிக்கா** வள ஆதாரங்கள்
5. மனிதர்களால் பயன்படுத்தப்படும் வள ஆதாரங்கள் **வளர்ச்சியுற்ற வள ஆதாரங்கள்** என்று அழைக்கப்படுகின்றன. எ.கா நிலக்கரி, இரும்புத்தாது
6. புதுப்பித்தல் அடிப்படையில் வள ஆதாரங்களை புதுப்பிக்க இயலாத அல்லது **இருப்பு வளங்கள்** என்றும் புதுப்பிக்கக்கூடிய அல்லது **வற்றாத வளங்கள்** என்றும் இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.
7. புதுப்பிக்க இயலாத வள ஆதாரங்கள் **வற்றக்கூடிய வள ஆதாரங்கள்** என அழைக்கப்படுகிறது.
8. தற்போது அதிகமாக பயன்படுத்திக்கொண்டிருக்கும் கனிமங்கள் உலோகக் கனிமங்கள், உலோகமற்ற கனிமங்கள், எரிபொருள் கனிமங்கள் ஆகியன ஆகும்.
9. **உலோகக் கனிமங்கள்** என்பது உலோத் தாதுக்கள் அடங்கிய மூலப்பொருட்கள் ஆகும்.
10. **உலோகமற்ற கனிமங்கள்** என்பது உலோகத்தாதுக்கள் அற்ற மூலப்பொருட்கள் ஆகும். **எரிபொருள் கனிமங்கள்** என்பது ஆற்றலை உருவாக்கும் கனிமங்கள் ஆகும்.
11. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு அந்நாட்டின் எரிபொருள் கனிமங்களே மிக முக்கியப்பங்கு வகிக்கின்றன.
12. தொழிற்சாலைகள், வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கு **எரிபொருள் கனிமங்கள்** தேவைப்படுகின்றன.
13. நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு மற்றும் அணுசக்தி கனிமங்கள் ஆகியவை விரைவில் தீர்ந்து போகும் முக்கியமான **எரிபொருள் கனிமங்கள்** ஆகும்.
14. நிலக்கரி பல மில்லியன் ஆண்டுகளாக உருவான கனிமம் ஆகும். எனவே இது **புதை எரிபொருள்** எனப்படுகிறது.
15. புவி அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களினால் காடுகள் படிவுப்படுகைகளில் புதைந்து **வெப்பம்** மற்றும் **அழுத்தம்** காரணமாக நிலக்கரியாக மாற்றம் அடைந்தன.
16. உலகின் மிக முக்கியமான நிலக்கரி வயல்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இரஷ்யா, ஜெர்மனி, ஐக்கிய அரசு போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.
17. ஆசியாவின் முக்கிய நிலக்கரி வயல்கள் **சீனா** மற்றும் இந்தியாவில் உள்ளது.
18. தமிழ்நாட்டில் உள்ள **நெய்வேலியில்** நிலக்கரி அதிகமாக வெட்டி எடுக்கப்படுகிறது. இங்கு **லிக்னைட்** அல்லது பழுப்பு நிலக்கரி அதிக அளவில் கிடைக்கிறது.
19. எண்ணெய் கடலுக்கடியிலுள்ள படிவுப்பாறைகளான **சேற்றுமண் படிவுகள், மென்கனிகல்** மற்றும் **மணற்பாறை** போன்ற அடுக்குகளில் காணப்படும்.
20. புவியின் அடியில் புதைந்துள்ள தாவரம் மற்றும் சுண்ணாம்பு ஓடுள்ள விலங்குகளின் படிமங்கள் புவியின் வெப்பம் மற்றும் அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.
21. விலங்குகளின் படிமங்கள் எண்ணெயாக மாறி பாறை இடுக்குகளிலும் பாறைத்துளைகளிலும் காணப்படுகிறது.
22. எண்ணெய் அடுக்கிற்குமேல் லேசான **ஹைட்ரோ கார்பன்** இயற்கை வாயு வடிவில் காணப்படுகிறது.
23. **எண்ணெய் படிவுகள்** நிலப்பகுதிகளிலும் கடல் பகுதிகளிலும் காணப்படுகின்றன.
24. இந்தியாவில் முக்கியமான எண்ணெய் வயல்கள் **அஸ்ஸாம்** நிலப்பகுதியில் காணப்படுகின்றன.
25. இந்தியாவின் மிகப்பெரிய **'மும்பை ஹை'** என்னும் எண்ணெய் வயல் கடற்பகுதியில் அமைந்துள்ளது.

26. தமிழ்நாட்டில் **காவிரி** டெல்டா பகுதிகளில் எண்ணெய் வளம் கண்டறியப்பட்டு உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது.
27. யுரேனியம், தோரியம் போன்ற கனிமங்கள் அணுசக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. **நமீபியா, கஜகஸ்தான், கனடா** போன்ற நாடுகளில் யுரேனியம் அதிக அளவில் காணப்படுகிறது.
28. இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் கேரள கடற்கரை மணற்பரப்புகளில் **இல்மனைட்** அதிகளவு காணப்படுகிறது.
29. உலகிலேயே அதிகளவு அணுசக்தியை உற்பத்தி செய்யும் நாடு **அமெரிக்க ஐக்கிய நாடு** ஆகும். அணுசக்தி எரிபொருளை அதிகளவில் பயன்படுத்தும் நாடு **பிரான்சு** ஆகும்.
30. இந்தியாவில் சென்னை, இராஜஸ்தான், தாராப்பூர், காக்ராபார், நரோரா, கூடங்குளம் ஆகிய இடங்களில் அணுமின்நிலையங்கள் உள்ளன.
31. புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்கள் அதிகமாக காணப்படுவதுடன் இயற்கையாகவே புதுப்பிக்கப்படுகிறது. எ.கா **காற்றாற்றல்**
32. **நீர்மின்சக்தி** என்பது புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்களுள் மிக வளர்ச்சியடைந்த வளமாகும்.
33. சீனாவில் உள்ள யாங்டிசி ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் **முப்பள்ளதாக்கு** அணையில் உலகின் மிகப்பெரிய நீர் மினசக்தி நிலையம் அமைந்துள்ளது.
34. இந்தியாவின் மிகப்பெரிய நீர் மின்சக்தி நிலையம் **பக்ராநங்கல்** அணையில் உள்ளது.
35. சூரிய ஆற்றல் வீடுகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களில் நீர் சூடாக்குதல் போன்ற பல வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.
36. **ஒளிமின் வோல்டா** மின்கலம் சூரிய சக்தியை சேமிப்பதற்கு தேவைப்படுகிறது.
37. உலகில் அதிக அளவு சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும் நாடு **ஜெர்மனி** ஆகும்.
38. காற்று வேகமாக தொடர்ந்து வீசும் பகுதிகளில் காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு **விசைப்பொறி உருளை** மிகவும் பயன்படுகிறது.
39. **ஐரோப்பா கண்டம்** காற்று ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்துகிறது. டென்மார்க்கின் 20% மின்சாரம் காற்று ஆற்றல் மூலமாகப் பெறப்படுகிறது.
40. இந்தியாவில் **மகாராட்டிரம்** மற்றும் தமிழ்நாட்டில் காற்று ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
41. தமிழ்நாட்டில் கன்னியாக்குமரி மாவட்டத்தில் உள்ள **ஆரல்வாய்மொழி** என்னும் பகுதியில் உலகின் மிகப்பெரிய காற்றலை நிறுவனம் உள்ளது.
42. மரங்கள், பயிர்கள், வேளாண் கழிவுப்பொருட்கள் உயிரி ஆற்றலுக்கு முகக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.
43. வளரும் நாடுகளில் மர எரிபொருளே முக்கிய முக்கியமானதாக திகழ்கிறது.
44. **சாண எரிவாயு** அல்லது **மீத்தேன்** மாட்டு சாணத்திலிருந்து உயிரிஎரிபொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.
45. தற்போது கரும்பிலிருந்தும் ஆமணக்கு வகை தாவரங்களிலிருந்தும் உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.
46. மனிதர்களின் வாழ்வு மற்றம் முன்னேற்றம் ஆகியவை இயற்கை வளங்களை சார்ந்தே இருப்பதால் இத்தகைய வளங்களை பயன்படுத்துதல் அவசியமாகும்.
47. புதுப்பிக்கக்கூடிய வளங்களை முழுமையாக பயன்படுத்த சிறந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அவசியமாகிறது.
48. மனிதர்கள் தங்களது வாழ்க்கைக்கு வள ஆதாரங்களையே சார்ந்து உள்ளனர்.
49. ஓர் இடத்தில் கிடைக்கப்பெறுகிற வள ஆதாரங்களைப் பொறுத்தே மனிதர்களின் தொழில்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

**I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மனிதர்களால் பயன்படுத்தப்படும் வள ஆதாரங்கள் .........**
   **அ) வளர்ச்சியுற்ற வளம்** ஆ) இயலாற்றல் வளம் இ) போக்கு வளம்
2. **கனிம வளங்கள் என்பவை ..........**
   அ) புதுப்பிக்ககூடிய வளங்கள் **ஆ) புதுப்பிக்க இயலாத வளங்கள்** இ) உயிரியல் வளங்கள்
3. **காற்று ஆற்றலை அதிகமாகப் பயன்படுத்தும் கண்டம் .......**
   **அ) ஐரோப்பா** ஆ) தென் அமெரிக்கா இ) அண்டார்டிக்கா
4. **நமது மாநிலத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி ........**
   **அ) பழுப்பு நிலக்கரி** ஆ) ஆன்த்ரசைட் இ) கிராபைட்
5. **இந்தியாவின் மிகப்பெரிய நீர்மின்சக்தி நிலையம் அமைந்துள்ள இடம்.......**
   **அ) பக்ரா நங்கல்** ஆ) மேட்டூர் இ) தாமோதர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இயற்கையில் காணப்படும் எந்த ஒரு பொருளும் மனிதர்களுக்கு பயனளிப்பதாக இருப்பின், அது **வள ஆதாரம்** எனப்படும்.
2. புவியின் கனிமச் சுரங்கங்களிலிருந்து ஒருமுறை வெட்டி எடுக்ககப்பட்டதை மீண்டும் நம்மால் **உருவாக்க அல்லது திரும்பப்பெற** இயலாது.
3. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு **வள ஆதாரங்கள்** மிக முக்கிய பங்கு வகிக்கிறது.
4. யுரேனியம் ஒரு **அணுசக்தி** கனிமமாகும்.
5. **அயன** மண்டலம் சூரிய ஆற்றலை மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏதுவாக உள்ளது.

**III.பொருத்துக.**

1. வடகடல் - அ. அணுசக்தி
2. ஆரல்வாய்மொழி - ஆ. எண்ணெய் வயல்கள்
3. எண்ணெய் மற்றும் நிலக்கரி - இ. யாங்டிசி
4. முப்பள்ளதாக்கு அணை - ஈ. புதை எரிபொருள்
5. தோரியம் - உ. காற்றாலை

**விடைகள்**
1. **ஆ**
2. **உ**
3. **ஈ**
4. **இ**
5. **அ**

**IV. சுருக்கமான விடையளி.**

**1. குறிப்பு எழுதுக.** அ) புதுப்பிக்க இயலாத வளங்கள் ஆ) இயலாற்றல் வள ஆதாரங்கள்

**அ) புதுப்பிக்க இயலாத வளங்கள்:**

1. புதுப்பிக்க இயலாத வளஆதாரங்கள் வற்றக்கூடிய வளஆதாரங்கள் எனப்படும்.
2. இவ்வளங்கள் உருவாக எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட வேகமாக நம்மால் நுகரப்படுகின்றன.
3. இவற்றை நம்மால் உருவாக்கவோ அல்லது திரும்பப் பெறவோ இயலாது.
4. எ.கா கனிம வளங்கள்

**ஆ) இயலாற்றல் வள ஆதாரங்கள்:**

1. மக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வள ஆதாரங்கள் இயலாற்றல் வள ஆதாரங்கள் என அழைக்கப்படுகின்றன.
2. எ.கா. சைபீரியா மற்றும் அண்டார்டிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் வளங்கள்.

**2. காற்றாலை பற்றி எழுதுக.**

1. காற்று வேகமாக தொடர்ந்து வீசும் பகுதிகளில் காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
2. இதற்கு விசைப்பொறி உருளை மிகவும் பயன்படுகிறது.
3. ஐரோப்பா கண்டம் காற்று ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்துகிறது.
4. டென்மார்க்கின் 20% மின்சாரம் காற்று ஆற்றல் மூலமாகப் பெறப்படுகிறது.
5. இந்தியாவில் மகாராட்டிரம் மற்றும் தமிழ்நாட்டில் காற்றுஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.

**3. வளங்களை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்த வேண்யடிதன் காரணம் யாது?**

1. மனிதர்களின் வாழ்வு மற்றும் முன்னேற்றம் ஆகியவை புவியின் இயற்கை வள ஆதாரங்களை சார்ந்து இருப்பதால் அத்தகைய பயன்படுத்துதல் அவசியம்.
2. மனிதர்களால் புதுப்பிக்க இயலாத வளஆதாரங்களை மிக கவனத்துடன் கையாள வேண்டும்.
3. புதுப்பிக்கக்கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்த சிறந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அவசியமாகிறது.

**V. விரிவான விடையளி.**

**1. நிலக்கரி மற்றும் எண்ணெய் உருவாதல் பற்றி விளக்குக.**

**1. நிலக்கரி உருவாதல்:**

1. நிலக்கரி பல மில்லியன் வருடங்களாக உருவான கனிமம் ஆகும்.
2. நிலக்கரி “புதை எரிபொருள்” என அழைக்கப்படுகிறது.
3. காடுகள் படிவுப் படுகைகளில் புதைந்து,வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக புதைந்து போன தாவரங்கள் நிலக்கரியாக மாற்றம் அடைந்தன.

**2. எண்ணெய் உருவாதல்:**

1. எண்ணெய் கடலுக்கடியிலுள்ள படிவுப்பாறைகளான சேற்று மண் படிவுகள், மென்கனிகல் மற்றும் மணற்பாறை போன்ற அடுக்குகளில் காணப்படும்.
2. புவியின் அடியில் புதைந்துள்ள தாவரம் மற்றும் சுண்ணாம்பு ஓடுள்ள விலங்குகளின் படிமங்கள் புவியின் வெப்பம் மற்றும் அழுத்தத்திற்கு உட்படுத்துகின்றன.
3. இவை எண்ணெயாக மாறி பாறை இடுக்குகளிலும் பாறைத்துளைகளிலும் காணப்படுகிறது.

**2. புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்களைப் பற்றி எழுதுக.**

**1. நீர்மின்சக்தி:**

1. நீர்மின்சக்தி என்பது புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்களுள் மிக வளர்ச்சியடைந்த வளமாகும்.
2. நீர்மின்சக்தி நீர்விழும் பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.
3. சீனாவில் உள்ள யாங்டிசி ஆற்றின் குறுக்கே முப்பள்ளதாக்கு அணையில் உலகின் மிகப்பெரிய மின்சக்திநிலையம் அமைந்துள்ளது.

**2. சூரிய ஆற்றல்:**

1. ஒளிமின் வோல்டா சூரிய சக்தியை சேமிப்பதற்கு தேவைப்படுகிறது.
2. உலகில் அதிக அளவு சூரிய ஆற்றலை உறபத்தி செய்யும் நாடு ஜெர்மனி ஆகும்.
3. சூரிய ஆற்றல் வீடுகள் அலுவலகக் கட்டிடங்களில் நீர் சூடாக்குதல் போன்ற பல வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

**3. காற்று ஆற்றல்:**

1. காற்று வேகமாக தொடர்ந்து வீசும் பகுதிகளில் காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
2. இதற்கு விசைப்பொறி உருளை மிகவும் பயன்படுகிறது.
3. ஐரோப்பா கண்டம் காற்று ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்துகிறது.
4. டென்மார்க்கின் 20% மின்சாரம் காற்று ஆற்றல் மூலமாகப் பெறப்படுகிறது.
5. இந்தியாவில் மகாராட்டிரம் மற்றும் தமிழ்நாட்டில் காற்றுஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.

**4. உயிரி ஆற்றல்:**

1. மரங்கள், பயிர்கள், வேளாண் கழிவுப்பொருட்கள் உயிரி ஆற்றலுக்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.
2. வளரும் நாடுகளில் மர எரிபொருளே முக்கிய முக்கியமானதாக திகழ்கிறது.
3. சாண எரிவாயு அல்லது மீத்தேன் மாட்டு சாணத்திலிருந்து உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

# 2. வள ஆதாரங்களும் பொருளாதார நடவடிக்கைகளும்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. மனிதர்கள் வள ஆதாரங்களை சார்ந்தே வாழ்கின்றனர். **இயற்கை வளங்கள்** புவியில் சீரற்று காணப்படுகிறது.
2. கிடைக்கும் வள ஆதாரங்களுக்கு ஏற்ப பொருளாதார நடவடிக்கைகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன.
3. புவியில் மனிதர்களின் தொழில்களை வெவ்வேறு பகுதிகளில் கிடைக்கும் வள ஆதாரங்களே நிர்ணயிக்கின்றன.
4. உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், பயிர் வளர்த்தல், மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் உதிரிபாகங்களை ஒன்றிணைத்தல், வியாபாரம் போன்ற பல தொழில்கள் அடங்கும்.
5. மனிதர்களின் நடவடிக்கைகள் **பொருளாதார நடவடிக்கைகள்** என்று அழைக்கப்படுகிறது.
6. தொழில்களை முதல் நிலைத் தொழில்கள், இரண்டாம்நிலைத் தொழில்கள், மூன்றாம் நிலைத் தொழில்கள், நான்காம் நிலைத் தொழில்கள், ஐந்தாம் நிலைத் தொழில்கள் என ஐவகைப்படும்.
7. முதல் நிலைத் தொழில்களில் மனிதர்கள் இயற்கை வள ஆதாரங்களோடு நேரிடையாக இணைந்து செயல்படுகின்றனர். இவற்றை **பழமையான தொழில் நடவடிக்கை** எனலாம்.
8. உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், கால்நடை மேய்த்தல், கனிமம் வெட்டியெடுத்தல், வேளாண்மை, மரம் வெட்டுதல் போன்றவை **முதல் நிலைத் தொழில்கள்** எனப்படும்.
9. முதல் நிலைத் தொழில்கள் **"சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்"** என்று அழைக்கப்படுகிறார்கள்.
10. மனிதர்கள் மூலப்பொருட்களை உற்பத்தி முறைகளுக்கு உட்படுத்தி அவற்றை முடிவுற்ற பொருளாக மாற்றுவதன் மூலம் மூலப்பொருட்களின் பயன்பாட்டினையும் மதிப்பினையும் பெருக்குகின்றனர்.
11. கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை, இரும்புத்தாதுவிலிருந்து கிடைக்கும் இரும்பு, எ∴கு போன்றவை இரண்டாம் நிலைத் தொழிலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.
12. உற்பத்தி செயல்கள் **இரண்டாம் நிலைத் தொழில்கள்** எனப்படுகின்றன. இரண்டாம்நிலைத் தொழில்புரியும் பணியாளர்கள் **"நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள்"** எனப்படுகின்றனர்.
13. வணிகம், போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு சேவைகள் மூன்றாம் வகுப்பு நிலைத்தொழில்கள் என அழைக்கப்படுகின்றன.
14. தொழில்நுட்பத்தில் சிறப்புமிக்க தொழில்நுட்ப பணியாளர்களும், வங்கிப் பணியாளர்களும் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஈடுபடுத்துகின்றனர்.
15. மூன்றாம் நிலைத் தொழில்களில் பணிபுரிவோரை **"வெளிர்சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்"** என்று அழைக்கிறோம்.

16. கல்வித்துறை, நீதித்துறை, மருத்துவம், பொழுதுபோக்கு, கேளிக்கைகள், நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகியன **நான்காம் நிலைத்தொழில்கள்** ஆகும்.
17. நான்காம் நிலைத் தொழிலாளர்கள் **"வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்"** எனப்படுகின்றனர்.
18. ஆலோசனை வழங்குவோர் மற்றும் திட்டம் வகுப்போர் போன்ற உயர்நிலையில் உள்ளோர் **ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள்** எனப்படுகின்றனர்.
19. ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள் **"தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்"** எனப்படுகின்றனர்.
20. ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள் பெருநகரங்களிலேயே அதிகமாக காணப்படுகின்றனர்.
21. வளர்ந்து வரும் நாடுகளில் முதல்நிலைத் மற்றும் இரண்டாம் நிலை தொழில்களும் காணப்படுகின்றன.
22. வளர்ச்சியடைந்த நாடுகளில் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் நிலைத் தொழில்களிலும் மக்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. முதல் நிலைத் தொழில்.........**
**அ) மரம் வெட்டுதல்** ஆ) வங்கி வேலை இ) ஆலோசனை வழங்குதல்

**2. ..........தொழில்புரிவோரை "வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்" என அழைக்கிறோம்.**
**அ) நான்காம் நிலை** ஆ) இரண்டாம் நிலை இ) மூன்றாம் நிலை

**3. தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்த உதவி புரியும் சேவை ............**
அ) மேய்த்தல் **ஆ) போக்குவரத்து** இ) வேட்டையாடுதல்

**4. ஐந்தாம் நிலைத்தொழில் அதிகமாகக் காணப்படும் இடங்கள் ......**
அ) கிராமங்கள் ஆ) பள்ளிகள் **இ) பெருநகரங்கள்**

**5. திட்டம் வகுப்போர் அடங்கிய தொழில்நிலை ........**
அ) முதல்நிலைத்தொழில் **ஆ) ஐந்தாம் நிலைத் தொழில்** இ) மூன்றாம் நிலைத் தொழில்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில், முக்கிய பொருளாதார நடவடிக்கைகளை **ஐந்து** பிரிவுகளாக பிரிக்கலாம்.
2. முதல்நிலைத்தொழிலில், மக்கள் இயற்கை வளஆதாரங்களோடு **நேரிடையாக** இணைந்து செயல்படுகின்றனர்.
3. மூலப்பொருட்களை உற்பத்தி செயல்களுக்கு உட்படுத்தி, முடிவுற்ற பொருளாக மாற்றும் செயல்முறை **இரண்டாம்** நிலைத்தொழில்கள் என அழைக்கப்படுகிறது.
4. மூன்றாம் நிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் **வெளிர் சிவப்பு கழுத்து பட்டையாளர்கள்** என அழைக்கப்படுகின்றனர்.
5. **வளர்ந்து வரும்** நாடுகள் மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் நிலைத்தொழில்களை விட முதல் மற்றும் இரண்டாம் நிலைத் தொழில்களே அதிகம் காணப்படுகிறது.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள் | - அ. மீன்பிடித்தல் |
| 2. | பொழுதுபோக்கு | - ஆ. மூன்றாம் நிலை |
| 3. | வணிகம் | - இ. இரண்டாம் நிலை |
| 4. | முதல் நிலை | - ஈ. தொழில் நுட்பம் தெரிந்த மற்றும் தொழில்நுட்பம் தெரியாத |
| 5. | பணியாளர்கள் | - உ. நான்காம் நிலை |

**விடைகள்**
**1. இ**
**2. உ**
**3. ஆ**
**4. அ**
**5. ஈ**

**IV. குறுகிய விடையளி.**

**1. முதல் நிலைத் தொழில்கள் யாவை?**
1. உணவு சேகரித்தல் 2. விலங்குகளை வேட்டையாடுல் 3. கால்நடைகளை மேய்த்தல்
4. கனிமங்களை வெட்டியெடுத்தல் 5. மீன்படித்தல் 6. வேளாண்மை

**2. மூன்றாம் நிலைத்தொழில்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.**
1. வணிகம், போக்குவரத்து மற்றம் தகவல்தொடர்பு சேவைகள் மூன்றம் நிலைத்தொழில்கள் எனப்படுகின்றன.
2. வங்கிப்பணியாளர்கள், சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் மூன்றாம் நிலைத் தொழிலாளர்கள் ஆவர்.
3. மூன்றாம் நிலைத் தொழிலில் பணிபுரிவோர்கள் "வெளிர் சிவப்பு பட்டை பணியாளர்கள்" என அழைக்கப்படுகின்றனர்.

**3. ஐந்தாம் நிலைத்தொழில்கள் பற்றி எழுதுக.**

1. அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள தீர்மானிக்கும் திறனுள்ள அறிவுரை வழங்குவோர் மற்றும் சட்டப்பூர்வ அதிகாரிகள் ஐந்தாம் நிலைத் தொழிலில் அடங்குவர்.
2. இவர்கள் பெருநகரங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றனர்.
3. ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள் "தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்" என அழைக்கப்படுவர்.

**V. விரிவாக விடையளிக்க.**

**1. மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகளின் வகைகளைப் பற்றி விளக்குக.**

**1. முதல் நிலைத் தொழிலாளர்கள்:**

1. இயற்கை வள ஆதாரங்களோடு நேரிடையாக இணைந்து செயல்படுகின்றனர்.
2. எடுத்துக்காட்டாக உணவு சேகரித்தல், மீன்பிடித்தல், வேளாண்மை ஆகியன முதல்நிலைத்தொழில்களாகும்.
3. முதல் நிலைத் தொழிலாளர்கள் "சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்" எனப்படுகின்றனர்.

**2. இரண்டாம் நிலைத் தொழிலாளர்கள்:**

1. மூலப்பொருட்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றுகின்றனர்.
2. உற்பத்தி செயல்கள் இரண்டாம் நிலைத் தொழில்கள் எனப்படுகின்றன.
3. எடுத்துகாட்டாக கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை .
4. இரண்டாம் நிலைத் தொழிலாளர்கள் "நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள்" எனப்படுகின்றனர்.

**3. மூன்றாம் நிலைத் தொழிலாளர்கள்:**

1. வணிகம், போக்குவரத்து மற்றம் தகவல்தொடர்பு சேவைகள் மூன்றம் நிலைத்தொழில்கள் எனப்படுகின்றன.
2. வங்கிப்பணியாளர்கள், சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் மூன்றாம் நிலைத் தொழிலாளர்கள் ஆவர்.
3. மூன்றாம் நிலைத்தொழில் பணிபுரிவோர்கள் "வெளிர் சிவப்பு பட்டை பணியாளர்கள்" எனப்படுகின்றனர்.

**4. நான்காம் நிலைத் தொழிலாளர்கள்:**

1. கல்வித்துறை, நீதித்துறை, மருத்துவம், பொழுதுபோக்கு, கேளிக்கைகள், நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகிய சூழல்களில் சேவைபுரிவோர் நான்காம் நிலைத்தொழில்கள் எனப்படும்.
2. நான்காம் நிலைத் தொழிலாளர்கள் "வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்" எனப்படுகின்றனர்.

**5. ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள்:**

1. அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள தீர்மானிக்கும் திறனுள்ள அறிவுரை வழங்குவோர் மற்றும் சட்டப்பூர்வ அதிகாரிகள் ஐந்தாம் நிலைத் தொழிலில் அடங்குவர்.
2. இவர்கள் பெருநகரங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றனர்.
3. ஐந்தாம் நிலைத் தொழிலாளர்கள் "தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்" என அழைக்கப்படுவர்.

# முதல்நிலைத் தொழில் I
# 3. முதல்நிலைத் தொழிலின் வகைகள்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. மனித நாகரிக வரலாற்றில் மிக முக்கிய அங்கமாக விளங்குவது **வேளாண்மை** ஆகும்.
2. வேட்டையாடுதல், மேய்த்தல் போன்ற செயல்களை மனிதன் நேரடியாக இயற்கையைச் சார்ந்து பெற்றார். இது **முதன்மைத் தொழில்** என அழைக்கலாம்.
3. உணவுப்பொருளை சேகரித்தல் மற்றும் வேட்டையாடுதல் போன்ற தொழில்கள் பழமையான தொழில்களாகும்.
4. மக்கள் தங்களுக்கு தேவையான உணவை இயற்கையிடமிருந்து சேகரித்தனர்.
5. பழங்கள் மற்றும் கிழங்குகளைக் காடுகளிலிருந்து சேகரித்தும் சில நேரங்களில் வேட்டையாடியும் உணவுப்பொருட்களை சேகரித்தனர்.
6. **வேட்டையாடுதல்** போன்ற செயல்கள் மற்றவருடன் தொடர்பு இல்லாத இடங்களில் வசிக்கும் மரபுவழி குடிமக்களிடம் காணப்படுகின்றன. எ.கா ஆப்பிரிக்க காடுகளில் வசிக்கும் **புஷ்மென் இனத்தவர்கள்**
7. வேட்டையாடுதல் முதன்மைத் தொழிலின் ஒருவகை ஆகும். வேட்டையாடும் மக்கள் வேட்டையாடிய விலங்கினங்களின் இறைச்சி மற்றும் தோலினை பெறுகின்றனர்.
8. வேட்டையாடுதல் போன்ற தொழில்கள் தொடர்பு கொள்ள முடியாத இடங்களில் தனித்து வாழும் மக்களிடையே காணப்படுகிறது. எ.கா ஆப்பிரிக்க **பிக்மிக்கள்,** கனடாவின் **எஸ்கிமோஸ்**
9. பசுமையான, புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடி பருவ காலத்திற்கு ஏற்ப நாடோடிகளாக மந்தைகளோடு மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடநகர்வு செய்வர்.
10. ஆப்பிரிக்கா மற்றும் மத்திய ஆசியாவில் மேய்ச்சல் தொழில் செய்பவர்கள் பருவநிலைக்கு ஏற்பவும், கிடைக்கும் மேய்ச்சல் நிலத்திற்கு ஏற்றவாறும் இடநகர்வு செய்கின்றனர்.

11. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் தீவனங்கள் விளைவிக்கப்பெரும் பண்ணைகள் உள்ளன.
12. மீன் பிடித்தல் **ஆறுகள், ஏரிகள்** மற்றும் கடற்கரைப்பகுதிகளில் நடைபெறும் முக்கியமான முதல்நிலைத் தொழிலாகும்.
13. **உள்நாட்டு மீன் பிடித்தல்** தொழிலானது, சிறியளவில் எளிய முறையில் நடைபெறுகிறது.
14. கம்போடியாவில் உள்ள **டோன்லேசாப்** உலகின் மிகப்பெரிய உள்நாட்டு ஏரியாகும்.
15. கடலில் மீன்பிடிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும். கண்டத்திட்டுப் பகுதிகளிலும், ஆழமற்ற பகுதிகளிலும் **பிளாங்டன்** எனப்படும் மீன் உணவு பெருமளவில் கிடைக்கிறது.
16. **தொழிற்கப்பல்கள்** எனப்படும் பெருங்கப்பல்கள் மாதக்கணக்கில் மீன் பிடிப்பதற்காக கடலிலேயே செயல்படுகின்றன.
17. **ஜப்பான், பெரு, கனடா, வடகடல் பகுதி** மற்றும் வடமேற்கு **அட்லாண்டிக் கடல்** ஆகிய பகுதிகள் முக்கிய மீன்பிடித்தளங்களாகும்.
18. திமிங்கலம் மற்றும் கடல் நாய்களை வேட்டையாடுதல், முத்து குளித்தல் போன்ற தொழில்களும் கடல்களில் நடைபெறும் தொழில்களாகும்.
19. மரமானது எரிபொருளாகவும், இருக்கைகள் செய்யவும், காகிதம் மற்றும் காகிதக்கூழ் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.
20. மித வெப்ப மண்டல காடுகளில் மென்மையான மரங்களும், ஒரே வகை **ஊசியிலை காட்டு மரங்களும்** காணப்படுகின்றன. எ.கா **இரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடுகள்**
21. உலகில் தொழிற்சாலைகளுக்கு பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு மிதவெப்ப காடுகளிலிருந்து பெறப்படுகின்றன.
22. வெப்ப மண்டல காடுகளில் விலை மதிப்புமிக்க **தேக்கு** மற்றும் **கருங்காலி** மரங்கள் காணப்படுகின்றன.
23. **சுரங்கத் தொழில்** மற்றும் வேளாண்மைத் தொழிலும் முதன்மை தொழில்களே ஆகும்.

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஜாரவாஸ் எனப்படும் தொன்பொதுமக்கள் காணப்படும் இடம் .........**
**அ) அந்தமான் நிக்கோபார்** ஆ) ஆப்பிரிக்கா இ) கனடா

**2. கனடாவில் காணப்படும் எஸ்கிமோக்கள் ..........**
**அ) வேட்டையாடுபவர்கள்** ஆ) உணவு சேகரிப்பவர்கள் இ) மேய்த்தல் தொழில் புரிபவர்கள்

**3. மீன் உணவு..........க்கு அருகாமையில் பெருமளவு கிடைக்கின்றது.**
**அ) கண்டத்திட்டு** ஆ) கண்டச்சரிவு இ) பெருங்கடல்குழி

**4. உலகில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு .......காடுகளிலிருந்து** பெறப்படுகின்றன.
**அ) மித வெப்ப மண்டல காடுகள்** ஆ) அயன மண்டல காடுகள் இ) தூந்திரக்காடுகள்

**5. பெருமளவில் நடைபெறும் முதன்மைத்தொழில் ...........**
**அ) உணவு சேகரித்தல்** ஆ) வேட்டையாடுதல் இ) சுரங்கத்தொழில்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதன் நேரடியாக இயற்கையைச் சார்ந்து செயல்படும் தொழில்கள் **முதல் நிலைத்தொழில்கள்** என அழைக்கப்படுகிறது.
2. **மேய்ச்சல்** தொழிலில், மேய்ச்சல் நிலங்களில் அதிக எண்ணிக்கையிலான விலங்குகளை மேய்ப்பர்.
3. **உணவு சேகரித்தல்** மற்றும் **வேட்டையாடுதல்** போன்றவை முதல்நிலைத் தொழில்களுள் பழமையான தொழில்களாகும்.
4. மித வெப்ப மண்டலக் காடுகளில் **மென்மையான மரங்கள்** மற்றும் **காட்டுமரங்கள்** காணப்படுவதால் மிகப்பரவலாகப் பயன்படுகிறது.
5. **கடலில்** மீன்பிடிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும்.

## III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | புஷ்மென் | - அ. அயனக் காடுகள் |
| 2. | ஜப்பான் | - ஆ. ஆப்பிரிக்கா |
| 3. | தேக்கு | - இ. மீன்ப்பிடித்தளம் |
| 4. | ஊசியிலைக்காடுகள் | - ஈ. கால்நடை உணவு |
| 5. | தீவனம் | - உ. மென்மையான மரங்கள் |

**விடைகள்**
**1. ஆ**
**2. இ**
**3. அ**
**4. உ**
**5. ஈ**

**IV. குறுகிய விடையளி.**

**1. முதன்மைத் தொழில்களின் பெயர்களை எழுதுக.**

வேளாண்மை, வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மேய்த்தல், மீன்பிடித்தல்

**2. 'மேய்த்தல்' என்றால் என்ன?**

பசுமையான, புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடி பருவ காலத்திற்கு ஏற்ப நாடோடிகளாக மந்தைகளோடு மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடநகர்வு செய்வர். இதுவே 'மேய்த்தல்' எனப்படும்.

**3. உணவு சேகரிக்கும் தொழில் நடைபெறும் சில இடங்களையும், மக்களையும் குறிப்பிடுக.**

1. ஆப்பிரிக்க காடுகளில் வசிக்கும் புஷ்மென் இனத்தவர்கள்
2. அந்தமான் நிக்கோபாரின் பழம்பெரும் மக்களான ஜார்வாஸ்

**4. உள்நாட்டு மீன்பிடித்தல் என்றால் என்ன?**

1. உள்நாட்டு மீன்பிடித்தல் தொழிலானது, சிறியளவில் எளிய முறையில் நடைபெறுகிறது.
2. உள்நாட்டு மீன்பிடித்தலில் சாதாரண மீன்வலைகளே மீன்பிடிக்கப் பயன்படுகின்றன.
3. கம்போடியாவில் உள்ள டோன்லேசாப் உலகின் மிகப்பெரிய உள்நாட்டு ஏரியாகும்.

**5. "அயனக்காடுகளை விட, மித வெப்ப மண்டலக்காடுகள் மரம் வெட்டும் தொழிலுக்கு பெருமளவில் பயன்படுகிறது". ஏன்?**

1. மிதவெப்ப மண்டலக்காடுகளில் மென்மையான மரங்கள் மற்றும் ஒரே வகை ஊசியிலைக் காடுகளும் காணப்படுகின்றன.
2. உலகில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு மித வெப்ப மண்டல காடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

**V. விரிவான விடையளி.**

**1. கடலில் நடைபெறும் மீன்பிடி தொழிலைப் பற்றி எழுதுக.**

1. கடலில் மீன்பிடிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும்.
2. கண்டத்திட்டுப் பகுதிகளிலும், ஆழமற்ற பகுதிகளிலும் பிளாங்டன் எனப்படும் மீன் உணவு பெருமளவில் கிடைக்கிறது.
3. தொழிற்கப்பல்கள் எனப்படும் பெருங்கப்பல்கள் மாதக்கணக்கில் மீன் பிடிப்பதற்காக கடலிலேயே செயல்படுகின்றன.
4. ஜப்பான், பெரு, கனடா, வடகடல் பகுதி மற்றும் வடமேற்கு அட்லாண்டிக் கடல் ஆகிய பகுதிகள் முக்கிய மீன்பிடித்தளங்களாகும்.
5. உலகில் தற்போது மீன்களைப்பிடித்து டின்களில் அடைக்கும் செயல்கள் கப்பலிலேயே நடைபெறுகிறது.

**2. முதல்நிலைத் தொழிலின் வகைகளைப் பற்றி கட்டுரை எழுதுக.**

**1. உணவு சேகரித்தல்:**

1. மக்கள் தங்களுக்கு தேவையான உணவை இயற்கையிடமிருந்து சேகரித்தனர்.
2. மற்றவருடன் தொடர்பு இல்லாத இடங்களில் வசிக்கும் மரபுவழி குடிமக்களிடம் காணப்படுகின்றன. எ.கா ஆப்பிரிக்க காடுகளில் வசிக்கும் புஷ்மென் இனத்தவர்கள்

**2. வேட்டையாடுதல்:**

1. வேட்டையாடுதல் முதன்மைத் தொழிலின் ஒருவகை ஆகும்.
2. வேட்டையாடும் மக்கள் வேட்டையாடிய விலங்கினங்களின் இறைச்சி மற்றும் தோலினை பெறுகின்றனர்.
3. மற்றவர் தொடர்பு கொள்ள முடியாத இடங்களில் தனித்து வாழும் மக்களிடையே காணப்படுகிறது. எ.கா ஆப்பிரிக்க பிக்மிக்கள், கனடாவின் எஸ்கிமோஸ்

**3. மேய்த்தல்:**

1. பசுமையான, புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடி பருவ காலத்திற்கு ஏற்ப நாடோடிகளாக மந்தைகளோடு மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடநகர்வு செய்வர். இதுவே 'மேய்த்தல்' எனப்படும்.
2. எ.கா ஆப்பிரிக்காவின் மசாய் இனத்தவர்கள்

**4. மீன்பிடித்தல்:**

1. மீன் பிடித்தல் ஆறுகள், ஏரிகள் மற்றும் கடற்கரைப்பகுதிகளில் நடைபெறும் முக்கியமான முதல்நிலைத் தொழிலாகும்.
2. உள்நாட்டு மீன்பிடித்தல் தொழிலானது, சிறியளவில் எளிய முறையில் நடைபெறுகிறது.
3. உள்நாட்டு மீன்பிடித்தலில் சாதாரண மீன்வலைகளே மீன்பிடிக்கப் பயன்படுகின்றன.
4. கம்போடியாவில் உள்ள டோன்லேசாப் உலகின் மிகப்பெரிய உள்நாட்டு ஏரியாகும்.

**5. மரம் வெட்டுதல்:**

1. மரமானது எரிபொருளாகவும், இருக்கைகள் செய்யவும், காகிதம் மற்றும் காகிதக்கூழ் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.
2. மித வெப்ப மண்டல காடுகளில் மென்மையான மரங்களும், ஒரே வகை ஊசியிலை காட்டு மரங்களும் காணப்படுகின்றன. எ.கா இரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடுகள்
3. உலகில் தொழிற்சாலைகளுக்கு பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு மிதவெப்ப காடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

# 4. சுரங்கத்தொழில்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. **சுரங்கத்தொழில்** என்பது ஒரு நாட்டின் முக்கியமான முதல்நிலைத்தொழிலாகும். சுரங்கத்தொழில் ஒரு நாட்டின் தொழில்வளர்ச்சிக்கு மிகவும் ஆதரவாக உள்ளது.
2. சுரங்கத்தொழில் என்பது புவியிலிருந்து விலை மதிப்புமிக்க கனிமங்களையும், **புவி அமைப்பியல்** சார்ந்த பொருட்களையும் தோண்டியெடுக்கும் செயலாகும்.
3. பழங்கால மக்கள் கனிமங்களைப் பயன்படுத்திக் கருவிகள்,கரடுமுரடான ஆயுதங்களையும் தயாரித்தனர்.
4. சுரங்கத்தொழில் பெருமளவில் நடைபெறுகிறது. காரணம் தொழிலகங்கள் கனிமவளங்களை பெருமளவில் பயன்படுத்துகின்றன.
5. **கனிமவளங்கள்** புதுப்பிக்கமுடியாத வளமாகும். எனவே சுரங்கத்தொழில் ஒரு **'கொள்ளைத்தொழில்'** என்று அழைக்கப்படுகிறது.
6. கனிமங்களை அவை உள்ளடக்கிய தாதுக்களைக் கொண்டு **உலோகக் கனிமம், உலோகமற்ற கனிமம்** மற்றம் **எரிபொருள் கனிமம்** என வகைப்படுத்தலாம்.
7. **எரிபொருள் கனிமங்கள்** உலோகமற்ற கனிம வளங்களாகும். அவை மிக முக்கியமான எரிபொருள் வளங்களாகும்.
8. தாதுக்கள் தோண்டி எடுக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்டு மதிப்புள்ள பொருள்களாக பிரித்தெடுக்கப்படுகிறது.
9. **கனிமத் தாதுக்கள்** பாறைகளின் வெடிப்புகளிலும், இடைமுறிவுகளிலும், இணைப்புப் பகுதிகளிலும் படிவுகளாகக் காணப்படுகின்றன.
10. பாறைகளினூடே குறைந்த அளவு தாதுப்படிவங்கள் இருப்பின் அது **குறைந்த அளவு தாதுப்படுகை** என்றும், அதிகளவு இருப்பின் **பெருமளவு தாதுப்படுகை** எனவும் வகைப்படுத்தப்படுத்தப்படுகின்றன.
11. **தாதுக்கள்** அடுக்குகளாகவும், வண்டல்களாகவும் படிய வைக்கப்படுவதால் வகைப்படுத்தப்படுகின்றன.
12. கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடத்தைப் பொறுத்துப் புவியின் மேற்பரப்பிலோ அல்லது அதற்கு அடுத்த பகுதியிலோ கிடைக்கும் கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.
13. புவியின் மேற்பரப்பில் வெட்டி எடுக்கப்படும் முறைகள் சுரங்கத் தொழில் **திறந்த வெளி முறை, பட்டைகளாக எடுத்தல்** முறை மற்றும் **வண்டல் பிரித்தல் முறை** என வகைப்படுத்தப்படுகின்றன.
14. திறந்த வெளிமுறையில் புவியின் மேற்பரப்பிலேயே கிடைக்கும் கனிமங்கள் தோண்டி எடுக்கப்படுகிறது.
15. பட்டைகளாக எடுத்தல் முறையில் மேற்படிந்த நீள் வடிவில் மண் மற்றும் பாறைகளை அகற்றியபின் கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.
16. **வண்டல் பிரித்தல்** முறை என்பது கனிமங்களை சலித்தோ, சுழற்றியோ தெளிய வைக்கப்பட்டு பிரித்து எடுக்கப்படும் முறையாகும்.
17. **குவாரியிங்** எனப்படும் வெட்டியெடுத்தல் முறை சுண்ணாம்புக்கல் போன்ற கட்டடப் பொருள்களைப் புவி மேற்பரப்பிலிருந்து எடுக்கும் முறையாகும்.
18. **நிலத்தடி சுரங்கத்தொழில்** முறையில் தாதுக்கள் புவிக்கு உட்பகுதியில் அதிக ஆழத்திலிருந்து வெட்டியெடுக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.
19. **பாதுகாப்பு** மற்றும் **முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்** நிலத்தடி சுரங்கத்தொழிலுக்கு மிக முக்கியமானதாகும்.
20. நிலக்கரி சுரங்கங்களில் **இயற்கை வாயு** காணப்படுவதால் தீப்பிடிக்கும் வாய்ப்புகள் உள்ளன.
21. **துளையிடுதல் முறை** மூலமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகிய எரிபொருள் கனிமங்கள் துளைத்து எடுக்கப்படுகின்றன.
22. எண்ணெய் கிணறுகளில் இருந்து துளைத்து எண்ணெய் எடுக்க **எண்ணெய் ரிக்** எனப்படும் ஒருவகை மேடையைப்பயன்படுத்துவர்.
23. துளையிட்டு எண்ணெய் எடுக்கும் எண்ணெய் வயல்கள் இருக்கும் இடங்களை அங்கு காணப்படும் **டெரிக்** எனப்படும் இயந்திரங்களினால் ஆன கோபுரம் போன்று தோற்றமளிக்கும் கட்டமைப்புகளைக் கொண்டு அறியலாம்.

24. **மேக்னடைட், ஹேமடைட், லிமோனைட்** மற்றும் **சிடரைட்** ஆகியவை இரும்புத் தாதுவின் வகைகளாகும்.
25. இரும்புத் தாது உலகில் அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆஸ்திரேலியா, சீனா, பிரேசில், இந்தியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய இடங்களில் அதிக இடங்களில் பரவியுள்ளன.
26. **செம்பு** திறந்தவெளி சுரங்கத்தொழில் முறை மூலம் எடுக்கப்படுகிறது. எ.கா அமெரிக்க ஐக்கிய நாடுகள்
27. **பாக்ஸைட்** அலுமினியத்தின் தாது ஆகும். பாக்ஸைட் திறந்த வெளி சுரங்க முறை மூலம் எடுக்கப்படுகிறது. எ.கா ஆஸ்திரேலியா, பிரேசில்
28. தகரத்தின் தாது **கேசிடரைட்** ஆகும். இது **வண்டல் பிரித்தல்** முறை மூலமாக பிரித்தெடுக்கப்படுகிறது. எ.கா மலேசியா, பொலிவியா
29. தங்கம் பெரும்பாலும் வண்டல் பிரித்தல் முறை மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. **காரட்** என்ற சொல் தங்கத்தின் தூய்மையை தெரிந்து கொள்ள பயன்படுத்தப்படுகிறது.
30. உலகில் தங்கம் அதிக அளவில் தென் அமெரிக்கா, கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் கானா ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.
31. உப்பு, பொட்டாசியம், நைட்ரேட், சல்பர், மைக்கா, பாறை உப்பு மற்றும் பாஸ்பேட் போன்ற கனிமங்கள் உலோகமற்ற கனிமங்கள் ஆகும்.
32. **மாணிக்கம்** மற்றும் **வைரம்** போன்றவை உலோகமற்ற கனிமவகையைச் சார்ந்ததாகும்.
33. **கந்தகம்** சுரங்கமுறை மூலம் வெட்டியெடுக்கப்படுகிறது. இது **பளீர் மஞ்சள்** நிறத்தில் காணக்கிடைக்கும் கனிமமாகும்.
34. **கனரக இரசாயன தொழிலகங்கள்**, வேதியியல் பொருள்கள் தயாரிக்க கந்தகத்தை பயன்படுத்துகிறது.
35. அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிகோ, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கந்தகத்தை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகள் ஆகும்.
36. **மைக்கா** கருப்பு நிறமுடைய கனிமமாகும். இது ஒளிபுகும் தன்மை கொண்டது.
37. மைக்கா மிக எளிதில் அடுக்குகளாகவும், பட்டைகளாகவும் பிளவுபடும் தன்மை கொண்டது. இது மின்சக்தி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.
38. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, நார்வே, பிரேசில் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கிய உற்பத்தி நாடுகளாகத் திகழ்கின்றன.
39. **ஆஸ்பெஸ்டாஸ்** திறந்தவெளிச் சுரங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. இது எளிதில் தீபிடித்துக்கொள்ளா பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.
40. கனடா, ரஷ்யா, பிரேசில், தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆஸ்பெஸ்டாஸ் அதிக அளவு வெட்டி எடுக்கப்படுகிறது.
41. **நிலக்கரி, எண்ணெய்** மற்றும் **இயற்கை வாயு** ஆகிய மூன்றும் மிக முக்கியமான எரிபொருள் கனிம வளங்களாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வண்டல் படிவுகளோடு காணப்படும் கனிமம் …..**
**அ) தங்கம்** ஆ) இரும்பு இ) நிலக்கரி

**2. அலுமினியத்தின் தாது ………**
அ) கந்தகம் **ஆ) பாக்ஸைட்** இ) நிலக்கரி

**3. மேக்னடைட் தாதுவை கொண்ட கனிமம்……**
**அ) இரும்பு** ஆ) சிடரைட் இ) தங்கம்

**4. இது ஒரு உலோகமற்ற கனிமமாகும்.**
அ) பெட்ரோலியம் **ஆ) கந்தகம்** இ) தகரம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சுரங்கத்தொழில் ஒரு **கொள்ளைத்தொழில்** எனவும் கருதப்படுகிறது.
2. திறந்தவெளிச் சுரங்கமுறை என்பது **புவியின் மேற்பரப்பில் வெட்டி எடுக்கும் முறை** எனவும் அழைக்கப்படுகிறது.
3. கனிமங்கள் ஒரு புதுப்பிக்க இயலாத **வளங்கள்**
4. மைக்கா **மின்சக்தி தயாரிக்கும்** தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.
5. **டெரிக்** என்பது எண்ணெய் வயல்களில் கோபுரம் போன்ற தோற்றமுடைய கட்டடைப்புகளாகும்.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | எரிபொருள் | - அ. தகரம் |
| 2. | மலேசியா | - ஆ. தங்கம் |
| 3. | வண்டல் பிரித்தெடுத்தல் | - இ. கட்டடப்பொருள் |
| 4. | சுண்ணாம்புக்கல் | - ஈ. சிலி |
| 5. | செம்பு | - உ. நிலக்கரி |

**விடைகள்**
1. உ
2. அ
3. ஆ
4. இ
5. ஈ

**IV. குறுகிய வடையளி.**

**1. கனிமங்கள் புவியில் எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றன?**
1. கனிமத் தாதுக்கள் பாறைகளின் வெடிப்புகளிலும், இடைமுறிவுகளிலும், இணைப்புப் பகுதிகளிலும் படிவுகளாகக் காணப்படுகின்றன.
2. கனிமங்கள் தூய்மையாகவோ அல்லது பாறைகளின் மற்ற பொருட்களுடன் கலந்து தாதுக்களாகவோ கிடைக்கிறது.

**2. நிலத்தடி சுரங்கத்தொழில் முறை பற்றி சிறுகுறிப்பு வரைக.**
1. நிலத்தடி சுரங்கத்தொழில் முறையில் தாதுக்கள் புவிக்கு உட்பகுதியில் அதிக ஆழத்திலிருந்து வெட்டியெடுக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.
2. பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நிலத்தடி சுரங்கத்தொழிலுக்கு மிக முக்கியமானதாகும்.
3. நிலக்கரி சுரங்கங்களில் இயற்கை வாயு காணப்படுவதால் தீப்பிடிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

**3. நிலக்கரியின் பல வகைகள் யாவை?**
ஆந்த்ரசைட் நிலக்கரி, லிக்னைட் பழுப்பு நிலக்கரி, ஆந்த்ரசைட் பழுப்பு நிலக்கரி

**4. எரிபொருள் கனிமங்கள் யாவை?**
நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு

**5. வண்டல் பிரித்தல் முறை என்றால் என்ன?**
1. வண்டல் பிரித்தல்முறை என்பது கனிமங்களை சலித்தோ, சுழற்றியோ தெளிய வைக்கப்பட்டுப் பிரித்து எடுக்கப்படும் முறையாகும்.
2. இம்முறை ஆற்று படுகைகளில் அதிக அளில் காணப்படும்.

**V. விரிவான விடையளி.**

**1. சுரங்கத்தொழிலின் வகைகளை விவரி.**

**1. சுரங்கத்தொழில் திறந்த வெளி முறை:**
திறந்த வெளிமுறையில் புவியின் மேற்பரப்பிலேயே கிடைக்கும் கனிமங்கள் தோண்டி எடுக்கப்படுகிறது.

**2. பட்டைகளாக எடுத்தல் முறை:**
பட்டைகளாக எடுத்தல் முறையில் மேற்படிந்த நீள் வடிவில் மண் மற்றும் பாறைகளை அகற்றியபின் கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.

**3. வண்டல் பிரித்தல் முறை:**
வண்டல் பிரித்தல் முறை என்பது கனிமங்களை சலித்தோ, சுழற்றியோ தெளிய வைக்கப்பட்டு பிரித்து எடுக்கப்படும் முறையாகும்.

**4. குவாரியிங் அல்லது வெட்டியெடுத்தல் முறை:**
சுண்ணாம்புக்கல் போன்ற கட்டடப் பொருள்களைப் புவி மேற்பரப்பிலிருந்து எடுக்கும் முறையாகும்.

**5. நிலத்தடி சுரங்கத் தொழில் முறை:**
தாதுக்கள் புவிக்கு உட்பகுதியில் அதிக ஆழத்திலிருந்து வெட்டியெடுக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.

**6. துளையிடுதல் முறை:**
கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகிய எரிபொருள் கனிமங்கள் துளைத்து எடுக்கப்படுகின்றன.

**2. உலோகக் கனிமங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.**

**1. இரும்புத்தாது:**
1. மேக்னடைட், ஹேமடைட், லிமோனைட் மற்றும் சிடரைட் ஆகியவை இரும்புத் தாதுவின் வகைகளாகும்.
2. இரும்புத் தாது உலகில் அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆஸ்திரேலியா, சீனா, பிரேசில், இந்தியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய இடங்களில் அதிக இடங்களில் பரவியுள்ளன.

**2. செம்பு:**
1. செம்பு திறந்தவெளி சுரங்கத்தொழில் முறை மூலம் எடுக்கப்படுகிறது.
2. எ.கா அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிகோ, சாம்பியா

**3. பாக்ஸைட்:**
1. பாக்ஸைட் அலுமினியத்தின் தாது ஆகும்.
2. பாக்ஸைட் திறந்த வெளி சுரங்க முறை மூலம் எடுக்கப்படுகிறது.
3. எ.கா ஆஸ்திரேலியா, பிரேசில்,ஜமைக்கா

**4. தகரம்:**
1. தகரத்தின் தாது கேசிடரைட் ஆகும்.
2. இது வண்டல் பிரித்தல் முறை மூலமாக பிரித்தெடுக்கப்படுகிறது.
3. எ.கா மலேசியா, பொலிவியா

**5. தங்கம்:**
1. தங்கம் பெரும்பாலும் வண்டல் பிரித்தல் முறை மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது.
2. காரட் என்ற சொல் தங்கத்தின் தூய்மையை தெரிந்து கொள்ள பயன்படுத்தப்படுகிறது.
3. எ.கா தென் அமெரிக்கா, கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் கானா

# குடிமையியல்

## 1. தேசிய ஒருமைப்பாடு

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. **பாரதம்** என்று அழைக்கப்படும் இந்தியா ஒரு மிகப்பெரிய நாடாகும். பல மதங்களின் பிறப்பிடமாக இந்தியா திகழ்கிறது.
2. ஆரியர்கள், கிரேக்கர்கள், குஷாணர்கள், ஹுணர்கள், அரேபியர்கள், மங்கோலியர்கள், மொகலாயர்கள், ஐரோப்பியர்கள் ஆகியோர் இந்தியாவில் **புதிய இனங்கள்** தோன்றுவதந்கு வழிவகுத்தனர்.
3. இந்தியா பல **இனங்களின் அருங்காட்சியமாக** தோற்றமளிக்கிறது.
4. **இந்திய கலாச்சாரம்** உலகில் மிகச்சிறந்ததாகப் போற்றப்படுகிறது. கலாச்சாரம் என்பது பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடாகும்.
5. இந்தியா பல கலாச்சாரங்களின் ஒன்றிணைப்பு மூலம் கலாச்சார ஒற்றுமையை பெற்றுத் திகழ்கிறது. இது **பன்முக பண்பாட்டு** சமுதாயத்தை உருவாக்குகிறது.
6. இந்தியாவின் விடுதலைக்குப் பிறகு மக்கள் பேசும் மொழியை அடிப்படையாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டது.
7. இந்தியாவில் **845** மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் **22 மொழிகள்** அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
8. **தேவநாகிரி** வடிவிலான **இந்தி** எழுத்து இந்தியாவின் அலுவல் மொழியாகவும், **ஆங்கிலம்** அலுவலக இணைப்பு மொழியாக உள்ளது.
9. இந்தியா **இலக்கியங்களின் கருவூலமாகத்** திகழ்கிறது. வேதங்கள், இராமாயணம், மகாபாரதம், விவிலியம், குரான் மற்றும் திருக்குறள் போன்றவை இந்தியர்களிடையே புகழ்பெற்றுள்ளன.
10. தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதிணென்கீழ்க்கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், பெரிய புராணம், கலிங்கத்துப்பரணி, தேவாரம், நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்றவை சிறப்புமிக்க நூல்களாகும்.
11. சமஸ்கிருத மொழியில் **வால்மீகியின் இராமாயணம்**, காளிதாசரின் மேகதூதம் மற்றும் **சாகுந்தலம்** இலக்கியத்துறையில் புகழ்பெற்றதாகும்.
12. இந்தியர்கள் மொழி, சமயம், சாதி வேறுபாடுகளின்றி இலக்கிய வளத்தினை நுகர்ந்து இன்புறுகின்றனர். இவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றன.
13. தீபாவளி, இராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, துர்கா பூஜை மற்றும் மகாசங்கராந்தி ஆகிய **இந்து விழாக்கள்** நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.
14. **மிலாது நபி, பக்ரீத்** மற்றும் இரமலான் போன்ற இசுலாமிய விழாக்களும், **புனித வெள்ளி, ஈஸ்டர்** மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
15. **சீக்கியர்கள்** குருநானக் ஜெயந்தியையும், **புத்தர்கள்** (பௌத்தர்கள்) புத்த பூர்ணிமாவையும், **சமணர்கள்** மகாவீர் ஜெயந்தியையும் கொண்டாடி வருகின்றனர்.

16. **சமய விழாக்கள்** மக்களிடையே சகோதரத்துவத்தையும், நட்பையும், சமய சகிப்புத் தன்மையும் வளர்ந்து வருகின்றது.
17. நமது பாரம்பரியத்தின் வெளிப்பாடாக **விருந்தோம்பல்,** ஈகை, அயலாருடன் நல்லுறவு, **சகோதரத்துவம்,** சமதர்மம், **சகிப்புத்தன்மை** மற்றும் பெரியோர்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவை அமைந்துள்ளன.
18. தென்னிந்திய மக்கள் **அரிசியை** உணவாகப் பயன்படுத்துகின்றனர். வட இந்திய மக்கள் **கோதுமை** மற்றும் பருப்பை உணவாகப் பயன்படுத்துகின்றனர்.
19. காலநிலைக்கு ஏற்ப மக்கள் கம்பளி, பருத்தி, செயற்கையிழைகள், தோல் மற்றும் பட்டினால் செய்யப்பட்ட ஆடைகள் உடுத்தி மகிழ்கின்றனர்.
20. இந்திய நாடு பல்வேறு படையெடுப்புகளுக்கு உட்பட்ட போதிலும் இந்தியப்பண்பாடு பெரும் மாற்றம் இல்லாமல் இன்றும் விளங்குகிறது.
21. **அஜந்தா** மற்றும் **எல்லோரா** ஓவியங்கள் புகழ்பெற்றவை.காந்தாரக்கலை இந்தியாவின் சிற்பக்கலையின் பெருமையை பறை சாற்றுகிறது.
22. காசி, **பத்ரிநாத்**, கேதார்நாத், ஹரித்துவார் மற்றும் பூரி கோவில், முஸ்லிம் தர்காக்கள், கிறித்தவ ஆலயங்கள், **சாஞ்சி ஸ்தூபி**, **மவுண்ட் அபு,** சரவண பெலகோலா போன்றவை இந்தியக் கட்டட கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.
23. தென்னிந்தியாவில் மதுரை **மீனாட்சி அம்மன் கோவில்**, தஞ்சாவூர் **பிரகதீஸ்வரர் ஆலயம்**, மகாபலிபுரம் குடைவரைக் கோயில்கள், காஞ்சிபுரம் கைலாச நாதர் கோவில் மற்றும் **சாந்தோம் ஆலயம்** போன்றவை கலை கட்டட கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.
24. **கர்நாடகம்** மற்றும் இந்துஸ்தான் **இசைப்பாணி** இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவை ஆகும்.
25. **பரதநாட்டியம், குச்சுப்புடி, கதக், மணிப்புரி** மற்றும் **ஒடிசி** போன்றவை இந்தியாவின் புகழ்பெற்ற நாட்டியங்களாகும்.
26. மொழி, உணவு, பழக்கவழக்கங்கள், உடை, மதம்,சமயம் போன்றவற்றால் வேறுபடுகின்றனர். அனைவரும் ஒரே பெயரால் **'இந்தியர்கள்'** என்றே அழைக்கப்படுகின்றனர்.
27. பல்வேறு வேறுபாடுகள் இருப்பினும் **இந்தியர்கள்** என்றே அழைக்கப்படுகிறார்கள்.
28. அனைத்து மக்களும் **இந்தியர்** என்ற ஒற்றுமை உணர்வுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இது தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.
29. பாரம்பரியம், பண்பாட்டு ஒற்றுமை, சமய சகிப்புத்தன்மை, சமய சார்பற்ற தன்மை, தேசிய சின்னங்கள், இறையாண்மை, சமய சார்பின்மை, சம தர்மம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
30. ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 19-**ஆம் நாள் சேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
31. இந்தியா **வேற்றுமையில் ஒற்றுமைக்கு** புகழ் பெற்ற நாடாகும்.
32. வகுப்பு வாதம், மொழிவாதம், சாதிப்பாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வட்டார ஏற்றத்தாழ்வுகள் ஒருமைப்பாட்டை பாதிக்கின்றன.
33. **வகுப்பு வாதம்** எனப்படுவது ஒரு சமூகம் மற்ற சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளும் சுயநல தீவிரப் போக்காகும்.
34. **1956-ஆம் ஆண்டு** மொழி அடிப்படையில் இந்தியா பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டன.
35. **சாதி பாகுபாட்டு முறை** என்பது சொந்த சாதியை உயர்வானதாகக் கருதுவதாகும்.
36. இந்திய சமூக அமைப்பு **சாதி முறையை** அடிப்படையாகக் கொண்டதாகும்.
37. சாதிமுறை சமூக மதிப்பீட்டினையும், சமூக பிரிவினையும் ஏற்படுத்தி சமுதாயத்தில் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றம் சமூக ஒற்றுமையை சீர் குலைக்கின்றன.
38. **பொருளாதார ஏற்றத்தாழ்வு** என்பது சமுதாயத்தில் உள்ள மக்களிடம் செல்வத்தை சமமாக பங்கீடு செய்ய இயலாமையாகும்.
39. பொருளாதார ஏற்றத்தாழ்வு **மக்கள் தொகை, கல்வியறிவின்மை, போதுமான இயற்கை வளமின்மை** போன்றவற்றை அடிப்படையாக கொண்டது.
40. **வட்டார ஏற்றத்தாழ்வு** என்பது பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையே காணப்படும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறிப்பதாகும்.
41. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், குறைவான வாழ்க்கைத்தரம், குறைவான தனிநபர் வருமானம் போன்றவை வட்டார ஏற்றத்தாழ்டவுகளுக்கு காரணமாகும்.
42. மொழி மற்றும் சமயம் சமுதாய வளர்ச்சியில் தடைக்கல்லாக இருக்கக்கூடாது, மாறாக படிக்கட்டுகளாக இருக்க வேண்டும்.

43. இந்திய மக்களாகிய நாம் பழங்கால பெருமைகளை நினைவு கூர்ந்து அதை உலக நாடுகளின் பார்வையில் நிலைநாட்ட இந்தியாவை தன்னிகரற்ற நாடாக விளங்கச்செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளின் எண்ணிக்கை .......ஆகும்.**
அ) 15 ஆ) 18 **இ) 22**

**2. இந்தியாவின் அலுவல்மொழி ……….. ஆகும்.**
அ) ஆங்கிலம் ஆ) தமிழ் **இ) இந்தி**

**3. இந்தியாவில் மாநிலங்கள் .........அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.**
**அ) மொழி** ஆ) இலக்கியம் இ) பண்பாடு

**4. தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைப்பிடிக்கப்படும் நாள் …… ஆகும்.**
அ) 14, நவம்பர் **ஆ) 19, நவம்பர்** இ) 1, நவம்பர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியா **பாரதம்** எனவும் அழைக்கப்படுகிறது.
2. குகைக்கோவில்கள் **மாமல்லரத்தில்** காணப்படுகிறது.
3. இந்திய சமூக அமைப்பு **சாதிமுறையை** அடிப்படையாகக் கொண்டது.
4. புத்தர்கள் **புத்த பூர்ணிமா** விழாவைக் கொண்டாடுகின்றனர்.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | காளிதாசர் | - அ. புனித நூல் |
| 2. | விவிலியம் | - ஆ. சமணர் கோவில் |
| 3. | அபு மலை | - இ. அமிர்தசரஸ் |
| 4. | பொற்கோவில் | - ஈ. மேகதூதம் |

**விடைகள்**
**1. ஈ**
**2. அ**
**3. ஆ**
**4. இ**

**IV. குறுகிய விடையளி.**

**1. "பண்பாடு" வரையறு.**
1. இந்திய கலாச்சாரம் உலகில் மிகச்சிறந்ததாகப் போற்றப்படுகிறது.
2. கலாச்சாரம் என்பது பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடாகும்.
3. இந்தியா பல கலாச்சாரங்களின் ஒன்றிணைப்பு மூலம் கலாச்சார ஒற்றுமையை பெற்றுத் திகழ்கிறது.
4. இது பன்முக பண்பாட்டு சமுதாயத்தை உருவாக்குகிறது.

**2. இந்துக்களின் சில திருவிழாக்களைக் குறிப்பிடுக.**
தீபாவளி, இராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, துர்கா பூஜை மற்றும் மகாசங்கராந்தி

**3. தென்னிந்திய கோவில்களில் சிலவற்றின் பெயரைக் குறிப்பிடுக.**
1. மதுரை மீனாட்சி அம்மன் கோவில்
2. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயம்
3. மகாபலிபுரம் குடைவரைக் கோயில்கள்
4. காஞ்சிபுரம் கைலாச நாதர் கோவில்

**4. தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் காரணிகள் யாவை?**
1. வகுப்பு வாதம் 2. மொழிவாதம் 3. சாதிப்பாகுபாடு
4. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் 5. வட்டார ஏற்றத்தாழ்வுகள்

**V. விரிவான விடையளி.**

**1. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" உள்ள நாடு என்பதை விளக்குக.**

**1. இந்தியா பல இனங்களின் அருங்காட்சியகம்:**
1. பாரதம் என்று அழைக்கப்படும் இந்தியா மதங்களின் பிறப்பிடமாக இந்தியா திகழ்கிறது.
2. ஆரியர்கள், கிரேக்கர்கள், குஷாணர்கள், ஹுணர்கள், அரேபியர்கள் போன்றோரின் குடியேற்றங்களின் மூலம் பல புதிய இனங்கள் தோன்றின.
3. எனவே இந்தியா பல இனங்களின் அருங்காட்சியமாக தோற்றமளிக்கிறது.

**2. வேற்றுமையில் ஒற்றுமை:**
1. மொழி, உணவு, பழக்கவழக்கங்கள், உடை, மதம்,சமயம் போன்றவற்றால் வேறுபடுகின்றனர்.
2. இருப்பினும் அனைவரும் ஒரே பெயரால் 'இந்தியர்கள்' என்றே அழைக்கப்படுகின்றனர்.

**3. பிற ஒற்றுமைகள்:**

கலாச்சார ஒற்றுமை, மொழி ஒற்றுமை, இலக்கிய ஒற்றுமை,

**4. விழாக்கள்:**

1. சமய விழாக்கள் மக்களிடையே நட்பையும், சமய சகிப்புத் தன்மையையும் வளர்த்து வருகின்றன.
2. ஆங்கில புத்தாண்டை அனைவரும் சமய வேறுபாடு கருதாமல் கொண்டாடி வருகின்றனர்.

**5. உணவும் உடையும்:**

உணவு உடைகளில் மக்கள் வேறுபட்ட போதிலும் பண்பாட்டு நிலையில் சிறப்புடன் விளங்குகின்றனர்.

**2. தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகளை விளக்குக.**

**தேசிய ஒருமைப்பாடு:**

1. பல்வேறு வேறுபாடுகள் இருப்பினும் இந்தியர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.
2. அனைத்து மக்களும் இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.
3. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 19-ஆம் நாள் சேிய ஒருமைப்பாட்டு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகள்:**

1. பண்பாட்டுப் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு ஒற்றுமை
2. சமய சகிப்புத்தன்மை
3. சமய சார்பற்ற தன்மை
4. தேசிய சின்னங்கள், தேசியக்கொடி, தேசிய கீதம்
5. இறையாண்மை, சமய சார்பின்மை, சம தர்மம்

# 2. சமூக-பொருளாதார பிரச்சனைகள்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. இந்தியாவின் சமூகப் பிரச்சனைகளில் முக்கியமானவை **எழுத்தறிவின்மை**, **குழந்தைத் தொழிலாளர்கள்** பிரச்சனைகள் மற்றும் **பெண்களுக்கு எதிரான அநீதி** போன்றவைகளாகும்.
2. எழுதவோ படிக்கவோ இயலாத நிலை **எழுத்தறிவின்மை** எனப்படும். எழுத்தறிவின்மை மக்களின் அறியாமைக்கு வழிவகுக்கின்றது.
3. **எழுத்தறிவு அளவு** மற்றும் **கல்வி வளர்ச்சி** நாட்டின் வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் காரணிகளாகும்.
4. எழுத்தறிவின்மையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபடுவதோடு மட்டுமல்லாது, அரசியல் மற்றும் சமூக, பொருளாதார பிரச்சனைகளையும் உருவாக்குகிறது.
5. **எழுத்தறிவின்மை** நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைகிறது.
6. 1948 - 1949-ஆம் ஆண்டு **பல்கலைக்கழக மானியக்குழு** தாய்மொழி மூலம் கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும் எனக்கூறியுள்ளது.
7. 1968 -ஆம் ஆண்டு கல்விக்கொள்கை நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
8. 1986 -ஆம் ஆண்டின் தேசிய கல்விக்கொள்கை ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கியது. மேலும் **முறைசாராக் கல்வி** முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
9. 1992-ஆம் ஆண்டின் தேசியக்கொள்கை **"கரும்பலகைத்திட்டம்"** மூலம் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வழிவகை செய்தது.
10. 1991-ஆம் ஆண்டு **பேராசிரியர் தாவே** அறிமுகப்படுத்திய **குறைந்தபட்ச கற்றல் அளவு** மூலம் ஆரம்ப பள்ளிக்கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது.
11. **தேசிய எழுத்தறிவு குழு**, வயது வந்தோர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.
12. அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் மூலம் ஆரம்பக்கல்வியை உலகளாவிய அளவில் மேம்படுத்த சமுதாயத்தின் ஒத்துழைப்போடு முயற்சிகள் எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.
13. **சர்வா சிக்ஷா அபியான்** திட்டத்தின்படிஅனைத்து குழந்தைகளுக்கும் 2010-ஆம் ஆண்டிற்குள் ஆரம்பக்கல்வி வழங்கப்பட வேண்டும்.
14. தமிழக அரசு **"அனைவருக்கும் கல்வி"** வழங்கும் நோக்கோடு கொண்டு வரப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.
15. 2011-கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் **எழுத்தறிவு 80.33%** ஆகும். அவர்களில் ஆண்கள் 86.81% பெண்கள் 73.86% ஆவர்.
16. ஐக்கிய நாடுகள் சபை 1990-ஆம் ஆண்டினை பன்னாட்டு எழுத்தறிவு வருடமாகவும், செப்டம்பர் 8-ஆம் தேதியை **உலக எழுத்தறிவு** தினமாகவும் அறிவித்துள்ளது.
17. தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் **குழந்தைத் தொழிலாளர்கள்** ஆவார்கள்.

18. உலகிலேயே இந்தியாவில் தான் அதிக குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.
19. குழந்தைகளுக்கு முறையான உணவு, உடை, கல்வி , இருப்பிடம் போன்றவைகள் கிடைக்காததால் குழந்தை தொழிலாளர்கள் உருவாகின்றனர்.
20. குழந்தை தொழிலாளர்கள் கடைகள், உணவகங்கள் மற்றும் தொழிற்கூடங்களில் சிறுசிறு பணிகளை செய்து வருகின்றனர். அது **வறுமை, கல்வியறிவின்மை** போன்றவை தோன்ற வழிவகுக்கிறது.
21. 1949-ஆம் ஆண்டு குழந்தைகள் பணி சட்டத்தின்படி, குழந்தைகள் பணி புரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்றும் பின்னர் இது 17-ஆகவும் உயர்த்தப்பட்டது.
22. 1951-ஆம் ஆண்டு **தோட்டத்தொழிலாளர்** சட்டத்தின்படி 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தோட்டத்தொழிலில் அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டது.
23. 1986-ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டத்தின்படி தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணிபுரிய 14 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும் எனக்கூறப்பட்டது.
24. 1987-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட **தேசிய குழந்தை தொழிலாளர்** கொள்கையின்படி **குழந்தை தொழிலாளர்முறை** ஒழிக்கப்பட்டது.
25. இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களால் 1976-ஆம் ஆண்டு **கொத்தடிமை தொழிலாளர் முறை**யை ஒழிக்க சட்டம் கொண்டு வரப்பட்டது.
26. இந்திய நாட்டின் மக்கள்தொகையில் பெண்கள் சரிபாதியாக இருந்தபோதிலும் சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுவதில்லை.
27. ஆணாதிக்கம், உடன்கட்டை ஏறும் வழக்கம், விதவை முறை, பெண்சிசுக்கொலை, வரதட்சணைமுறை, முறையான கல்வி மறுப்பு போன்றவை பெண்களுக்கு எதிராக அநீதிகளாகும்.
28. 1829-ஆம் ஆண்டு சட்டத்தின்படி **உடன்கட்டை ஏறும் வழக்கம்** ஒழிக்கப்பட்டது.
29. 1856-ஆம் ஆண்டு **விதவைகள் மறுமணச்சட்டம்** இயற்றப்பட்டது.டாக்டர்.முத்துலெட்சுமி அம்மையாரின் முயற்சியினால், 1929-ஆம் ஆண்டு **சாரதா சட்டம்** இயற்றப்பட்டு குழந்தைதிருமணம் தடைசெய்யப்பட்டது.
30. 1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்தில், **பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கும் சமபங்கு** உண்டு எனக்கூறப்பட்டுள்ளது.
31. 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வரதட்சணை தடைச்சட்டத்தின்படி, **வரதட்சணை கேட்பது** தண்டனைக்குரிய குற்றமாகும்.
32. 1976-ஆம் ஆண்டின் சம ஊதிய சட்டத்தில் சம பணிக்கு சம ஊதியம் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.
33. **தொட்டில் குழந்தை திட்டம்** பெண்குழந்தைகளை சிசுகொலையில் இருந்து பாதுகாக்கிறது.
34. 1978-ஆம் ஆண்டை **ஐ.நா சபை உலக பெண்கள்** ஆண்டாக அறிவித்துள்ளது.
35. ஏழ்மை, வேலையில்லாத்திண்டாட்டம், விலைவாசி உயர்வு மற்றும் மக்கள்தொகை பெருக்கம் ஆகியன முக்கிய பொருளாதார பிரச்சனைகள் ஆகும்.
36. உலக வங்கியின் கூற்றுப்படி, வறுமை என்பது **"குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இயலாத நிலைமை"** ஆகும்.
37. இந்திய சமுதாயம் **ஏழை, பணக்காரர்** என்று இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
38. இந்திய மக்கள் தொகையில் **1 / 3 வறுமை**க்கோட்டிற்கு கீழே உள்ளனர்.
39. மக்கள் தொகைப்பெருக்கம், மக்களின் குறைவான வருமானம், விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் மற்றும் எழுத்தறிவின்மையும் வறுமைக்கான காரணங்களாகும்.
40. அரசாங்கம் வறுமையை ஒழிக்க **வறுமை ஒழிப்புத்திட்டத்தினை** அறிமுகப்படுத்தியுள்ளது.
41. முதல் ஐந்தாண்டு திட்டத்தின்படி விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து **உணவுப்பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை** எடுக்கப்பட்டது.
42. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்நிலையை உயர்த்தவும் **பொருட்களின் விலையை குறைக்கவும்** முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.
43. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி உணவு உற்பத்தியில் **வறுமை ஒழிப்பு** நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
44. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி உணவு உற்பத்தியில் **சுய சார்பு நிலையை** உருவாக்கி வறுமையை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
45. பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி **தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கைகள்** மேற்கொள்ளப்பட்டன.

46. இந்திய அரசாங்கம் **ஜவஹர் ரோஜ்கார் யோஜனா** திட்டத்தின் மூலம் வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பை வழங்கி வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டது.
47. முன்னாள் பிரதமர் **திருமதி. இந்திராகாந்தி** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 20 அம்ச திட்டத்தின்படி கிராமப்புறத்தில் வறுமையை ஒழித்து சமூக நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.
48. **வேலையில்லாத் திண்டாட்டம்** என்பது பணிபுரிய விருப்பமும், உடல் தகுதியும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பதைக் குறிக்கும்.
49. விவசாய நாடான இந்தியாவில் **விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகள்** குறைந்த அளவிலேயே உள்ளன.
50. **மக்கள் தொகைப்பெருக்கம்** வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.
51. இந்திய அரசாங்கம் **தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு** திட்டத்தின்படி மக்களுக்கு அதிகப்பட்ச வேலைகிடைக்க வழிவகுத்தது.
52. 1979-ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த **கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம்** இளைஞர்களுக்கு தொழிற்புரட்சி வழங்கி சுய வேலைவாய்ப்பிற்கு வழி வகுத்தது.
53. 1989-ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்துள்ள **ஜவஹர் ரோஜ்கர் யோஜனா என்ற திட்டம்** கிராமப்புற மக்களுக்கு கிராம பஞ்சாயத்தின் மூலம் நிதி உதவி வழங்கி வருகிறது.
54. அத்தியாவசிய பொருள்களின் **உற்பத்தி, தேவை** அப்பொருளின் விலையை நிர்ணயம் செய'கிறது.
55. உற்பத்தி குறைவாகவும், தேவை அதிகமாகவும் இருந்தால் **விலை உயர்வு** ஏற்படுகிறது.
56. மக்கள் தொகை பெருக்கமும், பொருள்களின் உற்பத்தி குறைவும் விலை உயர்வுக்கு காரணமாகும்.
57. அரசாங்கம் **பொது விநியோக முறையின்** மூலம் மக்களுக்கு தேவையான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.
58. பொருட்களை பதுக்குபவர்களுக்கு எதிராகவும், **கள்ள வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக**வும் அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.
59. எதிர்பாராத விதமாக ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சியே **மக்கள்தொகை பெருக்கம்** ஆகும்.
60. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பிரச்சனை **மக்கள் தொகைப்பெருக்கம்** ஆகும்.
61. உலக நாடுகளில் மக்கள்தொகை அடிப்படையில் **இந்தியா இரண்டாவது இடத்தில்** உள்ளது.
62. இந்தியா உலக மக்கள்தொகையில் **16.84%** பெற்றுள்ளது.
63. மக்களின் பிறப்புவிகிதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் குறைந்துள்ளது. **மருத்துவம், அறிவியல்** மற்றும் **தொழில்நுட்ப** முன்னேற்றத்தினால் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது.
64. **சிசு மரணம்** அதிக அளவில் குறைந்தாலும், **ஆண் குழந்தை கட்டாயம் வேண்டும்** என்று கருதுவதாலும் மக்கள்தொகைப்பெருக்கம் ஏற்படுகிறது.
65. **மக்கள்தொகைப்பெருக்கம்** நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வெகுவாக பாதிக்கிறது.
66. மக்கள்தொகைப்பெருக்கம் **சுற்றுச்சூழல் பாதிப்பையும், சுகாதார சீர்கேட்டையும்** உருவாக்குகிறது.
67. **ஜூலை 11-ஆம் நாள்** உலக மக்கள் தொகை நாளாக பின்பற்றப்படுகிறது.
68. அரசாங்கம் மக்கள்தொகையை கட்டுப்படுத்த **குடும்ப கட்டுப்பாட்டு முறை**யை மக்களிடையே பரப்பி வருகிறது.
69. **பெண் கல்வியை ஊக்குவித்து** மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
70. நாட்டில் உள்ள அனைத்து பிரச்சனைகளும் முறையாக தீர்க்கப்பட வேண்டுமெனில், மக்கள் அனைவருக்கும் **முறையான கல்வி** கிடைக்க வழிவகை செய்திட வேண்டும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தேசிய கல்விக்கொள்கை ………… ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.**
அ) 1968 **ஆ) 1986** இ) 1996

**2. முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இலக்கு ………ஆகும்.**
அ) தொழில்துறை ஆ) தொழில்நுட்பம் **இ) விவசாயம்**

**3. உலக எழுத்தறிவு தினம் …….. ஆகும்.**
**அ) செப்டம்பர்-8** ஆ) அக்டோபர்-2 இ) ஜூலை-15

**4. 1829-ஆம் ஆண்டின் சட்டம்…….. ஐ ஒழித்தது.**
அ) சிசு மரணம் ஆ) குழந்தைத் திருமணம் **இ) சதி**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பல்கலைக்கழக மானியக்குழு **தாய்** மொழியை பயிற்று மொழியாக்க விரும்பியது.
2. 1990-ஆம் ஆண்டை உலக எழுத்தறிவு வருடமாக **ஐக்கிய நாடுகள் சபை** அறிவித்தது.

3. 1986-ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டம் குழந்தைகளை **தொழிற்சாலை** மற்றும் **சுரங்கத் தொழிலில்** பணியமர்த்த தடைவிதித்தது.
4. விதவை மறுமணச்சட்டம் **1856** ஆண்டு இயற்றப்பட்டது.

**III. பொருத்துக.**

1. சாரதா சட்டம் - அ. 1992
2. சம ஊதியச் சட்டம் - ஆ. 1976
3. கரும்பலகை சட்டம் - இ. திருமதி.இந்திராகாந்தி
4. 20 அம்ச திட்டம் - ஈ. 1929

**விடைகள்**
1. ஈ
2. ஆ
3. அ
4. இ

**IV. குறுகிய விடையளி.**

**1. எழுத்தறிவின்மை என்றால் என்ன?**
1. எழுதவோ படிக்கவோ இயலாத நிலை எழுத்தறிவின்மை எனப்படும்.
2. எழுத்தறிவின்மை மக்களின் அறியாமைக்கு வழிவகுக்கின்றது.
3. எழுத்தறிவின்மை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

**2. பெண்கள் முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சிலவற்றைக் கூறுக.**
1. 1829-ஆம் ஆண்டு சட்டத்தின்படி உடன்கட்டை ஏறும் பழகக்ம் தடைசெய்யப்பட்டது.
2. 1856-ல் விதவைகள் மறுமண சட்டம் இயற்றப்பட்டது.
3. 1956-ல் பெற்றோர் சொத்தில் பெண்களுக்க சமபங்கு என்று கூறப்பட்டது.
4. 1961-ல் வரதட்சணை தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

**3. “வறுமை” விளக்கம் தருக.**
1. உலக வங்கியின் கூற்றுப்படி, வறுமை என்பது “குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இயலாத நிலைமை” ஆகும்.
2. அரசாங்கம் வறுமையை ஒழிக்க வறுமை ஒழிப்புத்திட்டத்தினை (PAP) அறிமுகப்படுத்தியுள்ளது.

**4. வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?**
1. இந்திய அரசாங்கம் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின்படி மக்களுக்கு அதிகப்பட்ச வேலைகிடைக்க வழிவகுத்தது.
2. 1979-ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த கிராமப்புற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம் இளைஞர்களுக்கு தொழிற்புரட்சி வழங்கி சுய வேலைவாய்ப்பிற்கு வழி வகுத்தது.
3. 1989-ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்துள்ள ஜவஹர் ரோஜ்கர் யோஜனா என்ற திட்டம் கிராமப்புற மக்களுக்கு கிராம பஞ்சாயத்தின் மூலம் நிதி உதவி வழங்கி வருகிறது.

**V. விரிவான விடையளி.**

**1. சுதந்திரத்திற்குப்பின், நாடு எதிர்கொண்டுள்ள சமூக பிரச்சனைகளை விவரி.**

**1. எழுத்தறிவின்மை:**
1. எழுத்தறிவின்மை என்றால் என்ன?
1. எழுதவோ படிக்கவோ இயலாத நிலை எழுத்தறிவின்மை எனப்படும்.
2. எழுத்தறிவின்மை மக்களின் அறியாமைக்கு வழிவகுக்கின்றது.
3. எழுத்தறிவின்மை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

**2. குழந்தை தொழிலாளர் பிரச்சனைகள்:**
1. தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் ஆவார்கள்.
2. குழந்தைகளுக்கு முறையான உணவு, உடை, கல்வி , இருப்பிடம் போன்றவைகள் கிடைக்காததால் குழந்தை தொழிலாளர்கள் உருவாகின்றனர்.
3. உலகிலேயே இந்தியாவில் தான் அதிக குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

**3. பெண்களுக்கு எதிரான அநீதி:**
1. இந்திய நாட்டின் மக்கள்தொகையில் பெண்கள் சரிபாதியாக இருந்தபோதிலும் சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுவதில்லை.
2. ஆணாதிக்கம், உடன்கட்டை ஏறும் வழக்கம், விதவை முறை, பெண்சிசுக்கொலை,வரதட்சணைமுறை, முறையான கல்வி மறுப்பு போன்றவை பெண்களுக்கு எதிராக அநீதிகளாகும்.

**2. மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள் யாவை? அதனைக் கட்டுப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விவரி.**

**1. மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள்:**
1. மக்களின் பிறப்புவிகிதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் குறைந்துள்ளது.

2. மருத்துவம், அறிவியல் மற்றும் தொழிலநுட்ப முன்னேற்றத்தினால் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது.
3. சிசு மரணம் அதிக அளவில் குறைந்தாலும், ஆண் குழந்தை கட்டாயம் வேண்டும் என்று கருதுவதாலும் மக்கள்தொகைப்பெருக்கம் ஏற்படுகிறது.
4. மக்கள்தொகைப்பெருக்கம் சுற்றுச்சூழல் பாதிப்பையும், சுகாதார சீர்கேட்டையும் உருவாக்குகிறது.

**2. மக்கள் தொகையை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்:**

1. அரசாங்கம் மக்கள்தொகையை கட்டுப்படுத்த குடும்ப கட்டுப்பாட்டு முறையை மக்களிடையே பரப்பி வருகிறது.
2. பெண் கல்வியை ஊக்குவித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
3. பலதார மணம், பால் விவாகத்தை அரசு தடை செய்துள்ளது.
4. சிறு குடும்பத்திற்கு அரசு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.